Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | மாசி-6 | 18-02-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை -366




# சிறுவர்களைப் படையில் சேர்ப்பதான குற்றச்சாட்டு புலிகளால் நிராகரிப்பு!

## நான்கு மேஜர் ஜெனரல்களின் பதவிக்காலம் முடிவடைகிறது

சிறிலங்கா இிராணுவத்தில் மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள நான்கு பேர் 34 நாட்களுக்குள் ஓய்வு பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. சனாதிபதி சந்திரிகா படை அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்குவதில் ஒரே கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை. இந்நிலையில் இவர்களின் பதவி முடிவுறும் காலம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் முன்னாள் இிராணுவத் தளபதியும், தற்போதைய இிராணுவ அதிகாரிகளின் பதில் பிரதானியுமான மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால மார்ச் முதலாம் திகதி ஓய்வுபெற வேண்டிய நிலையிலுள்ளார். இிராணுவ தொண்டர் படைகளின் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி மார்ச் 24 ஆம் திகதி ஓய்வு பெற வேண்டிய நிலையிலுள்ளார். யாழ். மாவட்டத்தின் இிராணுவத் தளபதியாக இருந்த காலப்பகுதியில் உயர்பாதுகாப்பு ... விட

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபையின் பட்டியல் குறித்து தமிழ்ச்செல்வன் கவலை தெரிவிப்பு

(லண்டன்)

**விடுதலைப்புலிகள் இயக்கம் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதான குற்றச்சாட்டை நிராகரித்துள்ளதோடு உலகில் சிறுவர்களைப் படையில் சேர்க்கும் பல்வேறு அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப்புலிகள் அமைப்பையும் உள்ளடக்குவது தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கவலையும் வெளியிட்டுள்ளார்.**

வாகரைக்கு நேற்றுச் சென்ற அரசியல்துறைப் பொறுப்பாளர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களுக்கான நிவாரண செயற்பாடுகளைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்

(12ஆம் பக்கம் பார்க்க)

-கௌசல்யன் கொலை தொடர்பான

## கொபிஅனானின் கண்டனத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் கண்டனம்

விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் கொலை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் வெளியிட்ட கண்டன அறிக்கை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் கொபி அனானுக்கு எதிரான சிறிலங்கா அரசாங்கத்தின் கண்டனத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கான

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு கனடாவில் தடை வேண்டாம் கருத்துக் கணிப்பில் 62 வீதமானோர் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் மீது கனடாவில் தடை விதிக்க வேண்டாம் என கனேடிய தொலைக்காட்சி ஒன்று நடத்திய மக்கள் கணிப்பில் 69 சதவீத கனேடிய மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஓம்னி தொலைக்காட்சி ஆங்கிலத்தில் 24 மணித்தியாலங்களாக நடத்திய தொலைபேசிக் கணிப்பிலேயே இது வெளிப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளை கனடாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்க வேண்டும் என்று சிலர் சமீப நாட்களாகக் கனடாவில் கூறி வந்த நிலையிலேயே மக்களின் இக்கணிப்பும் வெளிவந்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை கனேடிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்தப் பகுதியில் ராணுவத்தின் மூன்று புதிய படை முகாம்கள் அமைப்பு!

மோதலைத் தடுக்கும் நடவடிக்கையாம்

பொலநறுவை மாவட்டத்தில் வெலிகந்தப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் 3 மேலதிக படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று இந்தப் பகுதியில் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பாதுகாப்பு தரப்பை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெலிகந்தப் பகுதியில் மோதல்கள் ஏற்படலாம் என்றும், இதனைத் தடுக்கும் முகமாகவே இந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலநறுவை மாவட்டத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

*மன்னார் தாழ்வுப்பாட்டில்*

## இளைஞன் மீதான சித்திரவதை; நீதிமன்றம் முன் மௌன ஊர்வலம்

(மன்னார்)

மன்னாரின் தாழ்வுப்பாடுக் கிராமத்தில் இளைஞர் ஒருவர் பொலிசாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் இடம் பெறவுள்ளது. அச் சமயம் அடையாள அணி வகுப்பு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளதோடு நீதிமன்றம் முன்பாக மக்கள் ஒன்றிணைந்து ஒரு மணித்தியாலயம் மௌன ஊர்வலம் நடத்த ஏற்பாடும் செய்துள்ளனர். இதனை முன்னின்று செயற்படுத்த மன்னார் பிரஜைகள் குழு முன்வந்துள்ளது. (18)



## யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களால் அரசுக்கெதிராகக் கண்டனப் பேரணி

பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட்ட போராளிகள் மற்றும் நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், சுனாமி அனர்த்த நிவாரண உதவிகளை தமிழர் தாயகப் பகுதிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் அரசு கடைப்பிடித்து வரும் பொறுப்புணர்வற்ற செயல்களைக் கண்டித்தும் நேற்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் பேரணியில் குடாநாட்டின் பல

(12ஆம் பக்கம் பார்க்க)

# மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடம்

கீழ்க் குறிப்பிடப்படும் இலிகிதர் பதவிக்கு புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் எல்லைப்பரப்பிலுள்ள நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் தாமாகவே விண்ணப்பத்தினைத் தயாரித்து எதிர்வரும் 2005.02.28 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு. என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதவி:-இலிகிதர்(தற்காலிகம்)

குறியீட்டு இலக்கம்:-302/15

வயதெல்லை:-18-30 கூட்டுறவு ஊழியராக வேலை செய்பவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

சம்பள அளவுத்திட்டம்:-3500-65X10-70X10-4850/- இத்துடன் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் சம்பள அதிகரிப்பும்.

தகைமைகள்:-கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக கணிதம்/தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தலைவர்,
மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்,
புதுக்குடியிருப்பு.

(சி.11440)

---

Improving Relevance and Quality of Undergraduate education (IRQUE)
Intensive course in Information Technology

The Student those who have applied to follow the above course are requested to be present on 2nd march 2005 on 3.00 pm in the kailasapathy Auditorium time table will be issued on the same day

IRQUE project
University of Jaffna

DD/ADMS

(சி.11343)

---

# சாவு அறிவித்தல்

## சரவணமுத்து -நாகராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து-நாகராசா அவர்கள் (17.02.2005) நேற்றுக் காலமானார். இவர் அருடசோதி அவர்களின் அன்புக் கணவரும், பிரபாகரன் (லண்டன்), பிரதீபன் (யாழ்.பல்கலைக்கழகம்), பிறேம் குமார் (சுகாதார கல்வி அலுவலர்,கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 18.02.2005 இன்று பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அலுவலர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:-
N.பிறேம்குமார் (மகன்)

(சி.11345)

---

# பணிநிலை வெற்றிடம்

முல்லை.தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் செம்மலை அளம்பில்:-

**01.பதவி:-கிளை மேற்பார்வையாளர்**

**சம்பள குறியீட்டு இலக்கம்:**-207/12

**சம்பள அளவுத்திட்டம்:**-(5500-80X10-90X10-7200)
66000-960X10-1080X10-86400

தகைமைகள்:-கூட்டுறவு பணியாளர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் களஞ்சிய காப்பாளர்/கொள்வனவு உத்தியோகத்தர்/கிளைநிலை மேற்பார்வையாளர்/கிளை நிலை முகாமையாளர் பதவிகளில் 02 வருட அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 14 ஆவது சம்பளத்தில் அமைந்த மேற்கூறிய பதவிகளில் 04 வருட அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் உயர்தர சான்றிதழ்/க.பொ.த (உ/த) 03 பாடசித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் களஞ்சியக் காப்பாளர் பதவியில் 01 வருட அனுபவம்/களஞ்சிய காப்பு தொடர்பாக பயிற்சி நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண சான்றிதழ்/க.பொ.த (சா/த) இரு அமர்வுகளிற்கு மேற்படாது கணிதம்,தமிழ் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களிலான சித்தி அத்துடன், களஞ்சியக் காப்பாளர் பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:-21-45 (கூட்டுறவு பணியாளர்களிற்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது)

**02.பதவி:-கிளை முகாமையாளர்**

**சம்பள குறியீட்டு இலக்கம்:**-208/13

**சம்பள அளவுத்திட்டம்:**-(5250-75X10-80X10-6800)
63000-900X10-960X10-81600

தகைமைகள்:-கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்திற்கு அமைந்த சம்பந்தப்பட்ட துறையிலான பதவியின் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தர சான்றிதழ்/க.பொ.த (சா/த) இரு தடவைகளிற்கு மேற்படாது கணிதம், தமிழ் உட்பட்ட 04 திறமைச் சித்தியுடன் 06 பாட சித்தி அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருட அனுபவம்.

வயதெல்லை:-21-45 (கூட்டுறவு பணியாளர்களிற்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

குறிப்பு:-கடித உறையின் மேல்பக்க மூலையில் என்ன பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படவேண்டும். ஆண்பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டு சொந்தக் கையெழுத்தில் பூர்த்தியாக்கி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 28.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ தலைவர், முல்லை தெற்கு ப.தெ.வ.அ.கூ சங்கம், செம்மலை அளம்பில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
முல்லை தெற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
செம்மலை.

(3240)

---

# பணிநிலை வேண்டுகை

காந்தரூபன் அறிவுச் சோலை சிறுவர் இல்லம் மலையாள புரத்தில் புதிய கட்டடப்பணியை மேற் கொண்டு வருகிறது. இக்கட்டடவேலை அபிவிருத் திப் பணிநிலைக்குள் தொழில் புரிய வல்லமை யுடைய இருபாலாரும் நேர்முகத் தேர்வில் தோற்ற லாம்.

**பணிநிலை**

| | |
|---|---|
| 01.முகாமையாளர் | 01 |
| 02.மேற்பார்வையாளர் | 06 |
| 03.அலுவலர் | 01 |
| 04.தட்டெழுத்தாளர் | 01 |
| 05.கணக்குப்பதிவாளர் | 01 |
| 06.கொள்வனவாளர் | 02 |
| 07.களஞ்சியக் காப்பாளர் | 02 |
| 08.காவலாளி | 03 |
| 09.சாரதி | 04 |
| 10.வோட்டப்பம்,ஜெனரேற்றர் இயக்குபவர் | 02 |
| 11.மேசன் ஒப்பந்தக்காரர்கள் | 10 |
| 12.தச்சு ஒப்பந்தக்காரர்கள் | 04 |
| 13.கூலித்தொழிலாளர்கள் | 50 |

நேர்முகத் தேர்வு:-21,22 பெப்ரவரி 2005 காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 வரை.

இடம்:-அறிவுச்சோலை-புதிய வளாகம், மலையாளபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:- 01.உரிய தகைமையுடன் தேர்வில் தோற்றலாம்.
02.சம்பளம் நேரில் பேசப்படும்.

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை,
சிறுவர் இல்லம்.

(சி.11344)

# அமெரிக்க உளவு விமான ஊடுருவல் தொடர்ந்தால் சுட்டு வீழ்த்தப்படும்!

## –ஈரான் திட்டவட்டமாக அறிவிப்பு

(தெஹ்ரான்)

**தனது நாட்டின் மீது அமெரிக்க உளவு விமானங்கள் பறந்து கொண்டிருப்பதாகவும் இது தொடருமானால் ஏவுகணை கொண்டு அந்த விமானங்களைத் தாக்குவோம் என்றும் ஈரான் எச்சரித்துள்ளது.**

ஈராக்கைத்தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா எந்தநேரத்திலும் கை வைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பை தடுத்து நிறுத்தும் வகையில் அதன் அணு ஆராய்ச்சி மையங்களை அமெரிக்கா தாக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தெலாம் என்ற இடத்திலுள்ள ஈரானின் அணு ஆராய்ச்சி மையத்திற்கு அருகே பயங்கரவெடிச்சத்தம் கேட்டது. விமானத்தில் இருந்து வீசப்பட்ட ஏவுகணைதான் விழுந்து வெடித்ததாக நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

ஆனால்,அதை ஈரான் மறுத்துள்ளது. சாலை அமைப்புப் பணிக்காக மலையை வெட்ட குண்டுகள் வைக்கப் பட்டதாகவும் அந்த ஒலிதான் பயங்கரமாகக் கேட்டதாகவும் அந்த நாட்டு உளவுப் பிரிவுத்துறை அமைச்சர் அலி யூனுசி கூறியுள்ளார்.

அவர் கூறுகையில்; எங்கள் நாட்டின் மீது குறிப்பாக அணு ஆராய்ச்சி மையங்கள் மீது அமெரிக்க உளவு விமானங்கள் நீண்ட காலமாகவே சுற்றிக்கொண்டிருப்பது எங்களுக்குத்தெரியும். அவை எங்கள் வான் பகுதியில் குறைந்த உயரத்தில் பறக்க முயன்றால் அவற்றைத்தாக்குவோம் என்றார்.

இதேவேளை நேற்று முன்தினம் ஈரானில் எழுந்த வெடிச்சத்தம் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதல் தான் என்று உலகெங்கும் செய்தி பரவியது. இதனால் அமெரிக்க சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டது. உலகளவில் பெற்றோலியத்தின் விலை உயர்ந்தது.

இந்நிலையில் அந்நிய நாட்டுத் தாக்குதலை நாங்கள் இணைந்தே எதிர்கொள்வோம் என ஈரானும், சிரியாவும் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

## தென் பசுபிக் கடல் பகுதியை கடும் சூறாவளி தாக்கியது

### –பல தீவுகள் நீரில் மூழ்கின.

தென் பசுபிக் கடற்பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக 250 கிலோ மீற்றர் வேகத்தில் வீசி வரும் கடும் சூறாவளியினால் கொக்தீவு உள்ளிட்ட பலதீவுகள் இராட்சத அலை ஏற்பட்டு நீரில் மூழ்கியுள்ளன.

தென் துருவத்தை அண்டிய இந்த கொக்தீவு உள்ளிட்ட தீவுகளில் பெரும் இராட்சத அலைகள் அடித்து வெகு வேகமாக நீர் உட்புகுந்ததால் அத் தீவுகளில் நீர் புகுந்துள்ளது.



அல்ப்ஸ் மலைத் தொடரில் 5300 ஆண்டுகளிற்கு முற்பட்ட சடலமொன்று பனிப்பாறையினுள் இருந்து விஞ்ஞானிகள் குழுவினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## செசன்யாவில் தாகெஸ்டன் துணைப் பிரதமர் தற்கொலைத் தாக்குதலில் உயிர் தப்பினார்!

### –சம்பவத்தில் மூவர் பலி ; ஐவருக்கு காயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் செசன்யாப் பகுதியில் தாகெஸ்டான் துணைப் பிரதமர் அமுச்சி அமுட்டினோவ் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது இடம்பெற்ற தற்கொலைத் குண்டுத் தாக்குதலில் உயிர் பிழைத்தார். எனினும் இச் சம்பவத்தில் மூவர் பலியானதுடன் ஐந்து பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்புச் சபைத் தலைவருடன் அவர் கிஸ்லேயர் நகரிலுள்ள அரசு அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தார்.

அவர் சென்ற பாதையின் குறுக்கே வேகமாக ஒரு கார் வந்தது. அது வெடித்துச் சிதறியது. ஆனால் துணைப் பிரதமர் அமுச்சி குண்டு துளைக்காத காரில் சென்றதால் உயிர் தப்பினார்.

உடனே பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு அமுச்சியையும், பாதுகாப்பு சபைத் தலைவரையும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றனர். கார் வெடி குண்டுத் தாக்குதல் நடந்த போது வீதியில் பயணம் செய்த மூன்று பேர் பலியானார்கள். ஐவர் பேர் காயம் அடைந்தார்கள்.

ரஷ்யா உத்தரவுக்கு கட்டுப்பட்டு செசன்யாவில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் தா கெஸ்தான் துணைப் பிரதமர் ஈடுபட்டு இருக்கிறார். இதனை ஆட்சேபித்து தீவிரவாத அமைப்பு தாக்குதலில் ஈடுபட்டு இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.



பாக்தாத்திற்கு மேற்கே ரமாடியில் நேற்று அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலால் ஏற்பட்டுள்ள பாரிய குழியை உள்ளூர் வாசி ஒருவர் பார்க்கின்றார்.

## எரிமலை வெடிக்கும் அபாயம் இந்தோனேஷியாவில் எச்சரிக்கை!

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் நுஸா டெங்காரா மாகாணம் எரிமலை அபாயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் ஜகார்த்தாவுக்கு கிழக்கே 2 ஆயிரம் கி.மீ தொலைவில் 3,703 மீற்றர் உயரத்திலுள்ள ஈகான் எரிமலையில் இருந்து எரிமலைக் குழம்பு வெளிப்படத் தொடங்கி புகை மண்டலமும் பரவ ஆரம்பித்து விட்டதை அடுத்து இந்த எச்சரிக்கை அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

உள்ளூர் எரிமலை ஆராய்ச்சி மையம் இது குறித்து கடந்த 7ஆம் திகதியே எச்சரித்திருந்தது.

## அல் ஜபாரிக்கு வாய்ப்பு

ஈராக்கின் அடுத்த பிரதமராக ஷியா முஸ்லிம்களின் கட்சி கூட்டணி சார்பில் அல் ஜபாரி பிரதமராக தேர்ந் தெடுக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது. இந்தக் கட்சி சார்பில் யார் அடுத்த பிரதமர் ஆவார் என்பது இன்னும் முடிவாகாத நிலையில் அவரின் பெயர் அடிபடுகிறது.

## நேபாள மன்னராட்சிக்கு எதிராக போராட்டம் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீண்டும் கைது

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக இன்று போராட்டம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ள நிலையில் நேபாள எதிர்க் கட்சித் தலைவர்கள் மீண்டும் மன்னர் ஞானேந்திராவின் பணிப்பின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேபாள நாட்டில் பிரதமர் துபே தலைமையிலான அரசை மன்னர் ஞானேந்திரா கடந்த பெப்ரவரி 1ஆம் திகதி பதவி நீக்கம் செய்தார். இதைத் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்ட அவர் எதிர்க் கட்சித் தலைவர்களை கைது செய்ய உத்தர விட்டார்.

பல தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். இதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித் தன. இதனால் எதிர்ப்புக்குப் பயந்து போன மன்னர் ஞானேந்திரா சில தலைவர்களை விடுதலை செய்தார்.

இந்த நிலையில் மன்னரின் நடவடிக்கையை எதிர்த்து இன்று அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனப் பேரணி நடத்த இருக்கிறார்கள். இதை ஒடுக்க மீண்டும் அரசியல் தலைவர்களை கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. நேபாள காங்கிரஸ் கட்சித் தலைவர் அர்ஜூன் நரசிங்கா, அவரது சகோதரியும் நேபாள பெண்கள் அமைப்பின் தலைவருமான மீனாபாண்டே ஆகியோர் காத்மண்டு நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சுனாமியால் காணாமற்போன மகனை ஏழு வாரங்களின் பின் கண்டுபிடித்த தாய்

### ஆஷே மாகாணத்தில் சம்பவம்




சுனாமிப் பேரலை தாக்கிய போது காணாமல் போன 10 வயது மகனை எங்கெங்கோ தேடி அலைந்து, ஏழு வாரங்களுக்குப் பின் ஒரு முகாமில் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டு பிடித்தார். அவனைப் பெற்ற தாய்.

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி சுனாமி பேரலை தாக்கியபோது இந் தோனோஷியாவில் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பலியானார் கள். பல பெற்றோர் தம் குழந்தைகளைப் பறிகொடுத்தனர். பல குழந்தைகள் தம் தாய் தந்தையரைப் பறிகொடுத்தனர்.

பல இலட்சம் குடும்பங்கள் சின்னாபின்னமாகி விட்டன. பல குடும்பங்களை விட்டுப் பிரிந்து எங்கெங்கோ உள்ள முகாம்களில் தஞ்சமடைந்தனர்.

அப்படிப்பட்டவர்களை அவர்களது குடும்பத்தினர் யாராவது வேறு எங்காவது உள்ள முகாமில் இருக்கிறார்களா என்பதைக் கண்டு பிடித்து அவர்களுடன் சேர்த்து வைக்கும் பணியும் தொடர்ந்து நடந்து வருகிறது. அப்படி தன் தாத்தா வீட்டுக்கு வந்திருந்தபோது சுனாமி தாக்கியதால் குடும்பத்தினரை விட்டுத்தனியே பிரிந்து விட்டான். 10 வயதுச் சிறுவன் இதில் கூடுதல் வேதனை என்னவென்றால் சுனாமி கோரத் தாண்டவத்தை நேரில் பார்த்த அதிர்ச்சியால் தன் பெற்றோரைப் பற்றிய விபரங்களையோ, தன் வீட்டு முகவரியையோ தன்னைப் பற்றிய விபரங்களையோ கூற இயலாத அளவுக்கு அவன் மனநிலை பாதிக்கப்பட்டு விட்டான் ஆனால் அவனைப் பெற்ற தாயான ஹயாதுன் ந.ீபீஸ் ஒவ்வொரு முகாமாக இவனைத் தேடி அலைந்தார். ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நலஅமைப்பும் இந்தோனேசிய சமூக நலத்துறையும் இவனைத் தேடுவதில் அவருக்கு உதவி புரிந்தன. கடைசியாக இந்திர புரி என்ற இடத்தில் இருந்த முகாமில் தன்மகனைக் கண்டு பிடித்து ஆனந்தக் கண்ணீருடன் கட்டியணைத்து உச்சிமோகந்தார் அந்தத் தாய்.

## பராகுவே நாட்டில் கடத்தப்பட்ட முன்னாள் சனாதிபதியின் மகள் கொலை!



(அசன்சியான்)

பராகுவே நாட்டில் கடந்த 1998-1999 ஆம் ஆண்டில் சனாதிபதியாக இருந்தவர் ரால்கியுபாஸ் ஒரு வருடத்திற்கும் குறை வான நாட்களே இவர் பதவியில் இருந் தார். தற்போது கோடீஸ்வர தொழில் அதிபராக இருக்கிறார். இவரது மகள் செசலியாகியுபாஸ் ( வயது 32) கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அசன்சியான் நகரிலுள்ள தனது வீட்டுக்குக் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது காரை வழி மறித்த 2 மர்ம மனிதர்கள் துப்பாக்கி முனையில் செசலியாவைக் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து அவரை மீட்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முன்னாள் சனாதிபதி ரால் ஒரு தூதுவர் மூலம் கடத்தல் காரர்களுடன் ஈமெயில் மூலம் பேச்சுவார்த்தையை நடத்தினார். அப்போது கடந்தல்காரர்கள் கேட்ட கோடிக்கணக்கான பணத்தை ரால் கொடுத்தார்.

அதை பெற்றுக் கொண்ட கடத்தல்காரர்கள் "இந்தப் பணம் அபராத தொகைதான்" என்று கூறினர். பின்னர் தொடர்பை அவர்கள் துண்டித்துக் கொண்டார்கள். அதன் பிறகு செசலியா எங்கு இருக்கிறார் என்ற விப ரம் தெரியவில்லை.

இந்த நிலையில் அசன் சியான் நகரின் கால்வாய் அருகே உள்ள வீட்டுப் பக்கம் செசலியா படுகொலை செய்யப்பட்டு பிணமாக கிடந்தார். அவரது பிணத்தைப் பொலிசார் மீட்டனர். மருத்துவ சோதனையில் பிணமாக கிடந்தது செசலியாதான் என்பது தெரிய வந்தது.

# பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை சமமாக நிறைவேற்றுவது அவசியம்

## உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

**இனநெருக்கடியாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். அவர்களின் தேவைகளை சமமான முறையில் நிறைவேற்றுவது அவசியமாகும் என உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர்கரோல் தெரிவித்துள்ளார்.**

அத்துடன் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தேசத்தை மீளக் கட்டியெழுப்பி மீட்சிபெற வைக்கும் திட்டத்திற்கு தாம் வழங்கும் உதவிகள் குறித்த முழு ஒதுக்கீடுகள் பற்றியும் உலகவங்கி விரைவில் அறிவிக்கும் என தெரிவித்துள்ள அவர்,

இன நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 45 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் இது தொடர்பான கடன் உடன படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதற்கமைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படும் நிதியுதவி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் இருந்து, இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது பகுதியளவில் தேசமடைந்த வீடுகளுக்கான நன்கொடைகள் 70 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார்.


# காணி அனுமதிப்பத்திரமற்றோருக்கு வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக்கரைச்சிப் பிரதேச செயலககாணி அலுவலகத்தினரால் நடமாடும் சேவைகள் மூலம் காணிப்பத்திர மற்றவர்களுக்குத் தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் மற்றும் தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக் காணிஅனுமதிப்பத்திரங்களாக மாற்றி வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் எதிர்வரும் 25 ஆம் திகதியன்று கிளிநொச்சி பாரதிபுரம், கிருஷ்ணபுரம் கிராம மக்களுக்கான காணி சம்பந்தமான சேவை அலுவலர் அலுவலகத்தில் வைத்தும் எதிர்வரும் 28 ஆம் திகதியன்று வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் கிராம மக்களுக்கான காணி சம்பந்தமான நடவடிக்கைகள் ஆனைவிழுந்தான் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்தும் காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரை நடைபெற வுள்ளது.

எனவே காணி சம்பந்தமான நடவடிக்கையினை மேற்கொள்ள வருபவர்கள் தகுந்த ஆவணத்துடன் குறிப்பிட்ட தினங்களில் சமுகமளிக்கும் வண்ணம் கிளி. கரைச்சிப்பிரதேச செயலக காணி அலுவலர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)



சுனாமி அனர்த்தத்தின் பின்பு முல்லைத்தீவு கடற்கரை ஓரமாக ஏராளமான பொருட்கள், பாரிய மரங்கள் என்பன கரை ஒதுங்குகின்றன. இவற்றை விடசீமெந்தினால் கட்டப்பட்ட பெரிய தொட்டிகள் போன்ற அமைப்பிலான பொருட்கள் பலவும் கரை ஒதுங்குகின்றன அதில் ஒன்றைப் படத்தில் காணலாம். (படம் குகன்)

# மட்டு.இல் தற்காலிக குடியிருப்புக்களை அமைப்பதில் த.பு.கழகம் தீவிரம்

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லடி, உப்போடை ஆகிய இடங்களில் சுனாமிப் பேரலையின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சத்துருக் கொண்டான் என்னும் இடத்தில் சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தற்காலிக வீடுகளை அமைத்து குடியிருத்தி வருகின்றது.

சுவிஸ் கிராமம் என்ற பெயரில் அமையப்பெற்றுள்ள இக்குடியிருப்பின் அனைத்துத் தேவைகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமே நிறைவேற்றி வருகின்றது.

அரசாங்கமோ, வேறு எந்த ஒரு நிறுவனமோ அக்குடியிருப்பில் வாழ்ந்துவரும் மக்களுக்கு எந்த விதமான உதவிகளையும் வழங்க முன்வராதது அங்கு வாழும் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திராமடு என்னும் இடத்திலும் சுனாமிப் பேரலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 250 ஏக்கர் காணிகள் துப்புரவாக்கப்பட்டு தற்காலிக வீடுகள் அமைக்கும் முயற்சியில் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டுள்ளது.

மேலும் வீடுகளற்ற நிலையில் பாடசாலைகளிலேயே இன்றுவரை தங்கி வாழ்ந்து வருகின்ற 2004 குடும்பங்களை தமிழர்புனர் வாழ்வுக்கழகமே தொடர்ந்து பராமரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

## -சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கு-

# சந்தேக நபரின் தொலைபேசித்தொடர்புகள் பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்கப் பணிப்பு

(கொழும்பு)

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலை வழக்கின் பிரதான சந்தேக நபர் தொடர்பான தொலைபேசி விபரங்கள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதவான் சரோஜினி குசலா வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் முகமட் மேற்கொண்ட அழைப்புகள் அவருக்கு வந்த அழைப்புகள் பற்றிய விபரங்களைத் தருமாறு சிறிலங்கா பொலிசார் ரெலிகொம் மற்றும் டயலொக் நிறுவனங்களைப் பணித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் விசேட பொலிஸ் பிரிவு விடுத்த வேண்டுகோளை ஏற்று கொழும்பு நீதவான் இவ்உத்தரவைப் பிறப்பித்துள்ளார். சந்தேக நபர் உயர்மட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களோடு தொடர்புகளைக் கொண்டிருந்ததாக கூறப்படுவதாகவும், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக தொலைபேசி இலக்கங்கள் திரட்டப்படுவதாக நீதவான் தெரிவித்துள்ளார்.

# சூரிய மின்கலம் திருட்டு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சிவிச்சென்ரர் பகுதியில் தனியார் வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த சூரிய மின்கலம் திருட்டுப் போயுள்ளது. இச்சம்பவமானது கடந்த திங்கட்கிழமை வீட்டு உரிமையாளர்கள் நித்திரையில் இருந்த வேளை இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி வட்டக்கச்சி காவல் பணிமனைக்கு கொடுத்த முறைப்பாட்டை அடுத்து வட்டக்கச்சி காவல் பணிமனையினர் விசாரணையினை நடாத்தி வருகின்றனர். (12)

# பாடசாலைமட்ட கனிஷ்ட செஞ்சிலுவை வட்டம் உருவாக்கம்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி மாவட்ட கிளையினரால் கிளிநொச்சி மத்திய கல்லூரி, பாரதி வித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை, புனித திரேசா மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பாடசாலை மட்ட கனிஷ்ட செஞ்சிலுவை அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் மத்தியில் அங்கத்தவர்களும் நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பாரதி வித்தியாலயத்தில் 6-11 வயதுக்குட்பட்ட மாணவர்களை கொண்டதான செஞ்சிலுவை வட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி நடவடிக்கையில் செஞ்சிலுவைச்சங்க செயலாளர் க.கணேஸ் பிரபாகரன் உதவியோகத்தர் ச.கோமேதகன், இளைஞர் செஞ்சிலுவை இணைப்பாளர் பே.ட.லிகரன் ஆகியோர் ஈடுபட்டனர். அத்துடன் மாவட்டத்தின் ஏனைய நான்கு கோட்டங்களையும் உள்ளடக்கி பாடசாலை மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஆயிரம் வானொலிப் பெட்டிகள் இ.ஒ கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புற்று முள்ளியவளை நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு ஆயிரம் பொக்கற் வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி வானொலிப் பெட்டிகள் நேற்று முன்தினம் முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முக்கியஸ்தர்கள் அங்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்களின் தலைமையில் காலை 10.00 மணி தொடக்கம் இவை வழங்கப்பட்டன.


இவற்றில் 500 வானொலிப் பெட்டிகள் வித்தியானந்தக் கல்லூரியில் உள்ள மக்களுக்கும் 228 வானொலிப்பெட்டிகள் தமிழ்வித்தியாலயத்திலுள்ள மக்களுக்கும் ,230 வானொலிப் பெட்டிகள் சைவப் பாடசாலையிலுள்ள மக்களுக்கும் வழங்கப்பட்டன. (கு.லோ)

# கண்டெடுப்பு

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற ஹைஏஸ் வாகனத்தில் அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. மாணிக்கம்-மங்கையற்கரசி நல்லூர்-யாழ்ப்பாணம் (535183880V) என்பவரது அடையாள அட்டையே கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும் (12)

# கள்ளமாடு வெட்டியோர் காவல் துறையால் கைது

இராமநாதபுரம் சம்புக்குளம் பகுதியில் கள்ள மாடு வெட்டியோர் வட்டக்கச்சிக் காவல் பணிமனையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் இராமநாதபுரம் சம்புக்குளம் பகுதியில் இறைச்சித் தேவைக்காக மாடு ஒன்றினைக் களவாகப் பிடித்து வெட்டிய நான்கு நபர்களை வட்டக்கச்சிப் பிரதேச காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இதேவேளை இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாக வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி கி.கிங்ஸ்லி தாஸ் தெரிவித்துள்ளார் (15)



நேற்று முன்தினம் டிப்போச்சந்திக்கு அருகாமையில் நடந்த வீதி விபத்தொன்றில் கன்டர் ரக வாகனமும், ஊந்துருளி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. அதாவது கிளி.நுயிலும் இல்லத்தை நோக்கி வந்த கன்டர் வாகனமும், சேவியர் கடைச்சந்தியிலிருந்து கிளி.நோக்கி சென்ற உந்துருளியும் மோதிக்கொண்டன. சேதமடைந்த உந்துருளியைப் படத்தில் காணலாம்.

## -கண்டாவளை பிர.செயலகத்தில்-

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை 19,20 இல்

(கண்டாவளை)

கண்டாவளைப்பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு மற்றும் தேசிய அ.அட்டை தொலைத்தவர்கள் தேமடைந்தவர்கள் இப்பிரதேசத்தில் இதுவரையும் தே.அ.அ பெறாதவர்கள், தொலைத்தவர்கள், புதுப்பிக்க வேண்டியவர்கள் நலன்கருதி கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தினரால் எதிர்வரும் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் கண்டாவளைப் பிரதேசசெயலகத்தில் இடம்பெயர் சேவை நடைபெறவுள்ளது. பயன்பெறவிரும்புவோர் அப்பகுதி கிராமசேவகர்களுடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களைப் பூரணப்படுத்தி மேற்குறிப்பிட்ட நாட்களில் நேரில் சமுகம் தந்து பயன்பெறுமாறு அப்பகுதி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (14)

# சுனாமியால் பாதிப்புற்றுள்ள உறவுகளுக்கான எமது உதவிகள் ஓய்ந்து போய் விடக் கூடாது

-வணஎப்.ஆர்.எஸ்.இயூயின் பிரான்சிஸ் அடிகளார் வேண்டுகோள்

(வடமராட்சி)

**சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கான எமது உதவிகள் ஓய்ந்து போகக் கூடாதென ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த மக்களுக்கு வேண்டுகோளை விடுப்பதாக வணக்கத் திற்குரிய வணபிதா எப்.ஆர்.எஸ்.இயூயின் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.**

லண்டனில் உள்ள கிறிஸ்தவ தமிழ்ப்பிரிவைச்சேர்ந்த வணபிதா எப்.ஆர்.எஸ்.இயூயின் பிரான்சிஸ் சுனாமிக்கடல் கொந்தளிப்பினால் பாதிப்பிற்குள்ளான வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளுககு நேரில் விஜயம் செய்து சேதங்களைப் பார்வையிட்ட பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.ஆயர் அதிவணக்கத் திற்குரிய தோமஸ்சௌந்தர நாயகத்தின் அழைப்பின் பெயரில் வருகைதந்திருந்த அவர், யாழ். ஆயர் இல்லத்தில் வைத்து எமக்கு அளித்த செவ்வியின் போதே மேற் கண்ட அழைப்பை விடுத்தார்.

"வடமராட்சியின் கரையோரக் கிராம மக்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டம் என்பவை சுனாமியால் கடும் அழிவைச்சந்தித்துள்ளன. அப்பகுதிகளில் இயல்புநிலையினை ஏற்படுத்தி வழங்குவதில் பல அமைப்புக்களும் முழு வீச்சில் செயற்பட்டு வருகின்றன. எனினும் இப்பணிகள் அத்துடன் முடிவடைந்து போகக்கூடாது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட எமது உறவுகள் முழுமையாக சொந்த இடங்களில் மீள் குடியமர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் அவர்கள் தமதுதொழில் முயற்சிகளை ஆரம்பிக்க வழிவகைகள் உருவாக்கப் படவேண்டும். அதற்கேற்றவாறு முழுஅளவிலான உதவிகள் முன்னெடுக்கப்படவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு எமது உறவுகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை நல்க வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.(27)

## மூலஸ்தானத்திற்கு அத்திவாரக்கல் நாட்டல்

(நல்லூர்)

ஊரெழு வடக்கு சக்திபுரம் வேல்முருகன் ஆலய மூலஸ்தானத் திற்கான அத்திவாரக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் அப்பகுதியைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். (41)

## சுனாமி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுனாமி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் 15.02.2005 அன்று காலை 9.00 மணிக்கு யாழ். வலய முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெற்றது.

தற்காலிகமாக அமைக்கப்படவுள்ள 18 இடைத்தங்கல் முன்பள்ளிகள் தொடர்பாகவும் அதற்கான கற்றல் உபகரணங்கள், போசாக்குத்திட்டங்கள் ஆசிரியர்களுக்குரிய வேதனங்கள் வழங்குவது தொடர்பாகவும் மற்றும் மலசல கூடங்கள், கிணறுகள் அமைத்தல் தொடர்பாகவும் முன்பள்ளிகளை அமைப்பதற்கு எந்த நிறுவனங்கள் பொறுபேற்பது தொடர்பாகவும் இக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போரூட் சர்வோதயம், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், சிறுவர் பாதுகாப்பு வேள்ட்விஷன் உள்ளூராட்சி திணைக்களம் ஆகிய நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

## 'கியூமெடிக்கா' சுனாமியால் பாதிப்புற்றோருக்கு 1000 மீன்பிடிப் படகுகளை வழங்க இணக்கம்

(பருத்தித்துறை)

கியூமெடிக்கா நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அவர்களது தொழிலை மேம்படுத்தும் வகையில் ஆயிரம் படகுகளை வழங்க எழுத்துமூலம் உறுதியளித்துள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசச்செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் இரண்டு கட்டங்களாக 35 படகுகளையும் 35 வலைகளையும் இந்நிறுவனம் சமாசத்திடம் கையளித்துள்ளது. முதற்கட்டமாக 15 படகுகளும், வலைகளும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்ட மீதிப் படகுகளும்,வலைகளும் விரைவில் உரியவர்களுக்கு வலைகளும் விரைவில் உரியவர்களுக்கு வழங்கப்பட இருப்பதாகச் செயலாளர் மேலும் தெரிவித்தார். தொடர்ந்தும் இந்நிறுவனம் மூலம் பெறப்படும் படகுகள். வலைகள் மீனவர்களுக்கு உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படுமெனவும் தெரிவித்தார் (45)

## குடாநாட்டில் 512 குளங்களில் 52 குளங்கள் புனரமைப்பு

யாழ்.குடாநாட்டிலுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்வதில் அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருவதால் யாழ். குடாநாட்டிலுள்ள குளங்கள் பல சேதமடைந்த நிலையில் தொடர்ந்தும் காணப்படுகிறது.

அந்த வகையில் யாழ்.குடாநாட்டில் 512 குளங்கள் காணப் படுகின்ற போதும் இவற்றில் 52 குளங்களே கடந்த காலங்களில் திருப்திகரமாகப் புனரமைக் கப்பட்டுள்ளன.

இதனால் யாழ் குடாநாட்டில் உள்ள 460குளங்கள் நீண்ட காலமாகப் புனரமைப்புகள் ஏதும் செய்யப்படாத நிலையில் இருந்து வருவதால் இவ்வாறான குளங்களை அண்டிய பிரதேசத்தவர்கள் பெரும் இடர்பாடுகளை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன் குளப்புனரமைப்பில் உரிய அக்கறை காட்டப்படாததால் விவசாயிகளும் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

## புற்றுநோயாளர் காப்பக அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(நல்லூர்)

வடக்கு-கிழக்கு புற்றுநோயாளர்களுக்கான உதவிச்சங்கத்தினால் புற்று நோயாளர் காப்பகத்திற்கான அடிக்கல், அண்மையில் மருதனார் மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் நன்கொடையாகப் பெறப்பட்ட காணியில் நாட்டப்பட்டுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்டடத்திற்கான சங்கை நல்லூர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகளும், அத்திவாரத்திற்கான கல்லை லண்டனிலிருந்து வருகைதந்த பிரபல வர்த்தகரும், கேன்அமைப்பைச் சேர்ந்தவருமான இ.தர்மகுலசிங்கம் மற்றும் லண்டனில் இருந்து வருகைதந்தகேன் அமைப்பின் பொருளாளர் எம் தங்கராசா ஆகியோர் நாட்டினார்கள்.

அவுஸ்திரேலியா நாட்டில் இருந்து வருகைதந்து கேன் அமைப்பின் புற்றுநோயாளர்களுக்கான நடமாடும் சேவையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஆன் உட்பட வங்கி முகாமையாளர்கள், வைத்தியக் கலாநிதிகள், அதிபர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் எனப் பலரும் அத்திவாரத்திற்கான கற்களை வைத்தனர். இதைத் தொடர்ந்து பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. (41)

## வளலாயில் குடியமர்த்த வலியுறுத்தி மறியல் போராட்டம் நடத்த ஏற்பாடு

(பருத்தித்துறை)

வளலாய் பகுதியில் தம்மை குடியமர்த்துமாறு கோரி மயிலிட்டி, காங்கேசன்துறை பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்குப் பகுதியில் இருந்து வரும் மக்கள் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்த தயாராகி வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் மயிலிட்டித்துறை கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் சிவலிங்கம் விஜயரத்தினம். அவர் மேலும் தெரிவிக்கும் போது எங்களை வளலாய் பகுதியில் குடியமர விட்டால் நாங்கள் சந்தோசமாக வாழ முடியும். நாங்கள் மயிலிட்டி காங்கேசன் துறையைச் சேர்ந்தவர்கள் அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறினாலும் எங்களை வளலாய் பகுதியில் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் .

இங்கே 150 யார் தூரத்தில் இருப்பதற்கு எங்களுக்கு காணிகள் இல்லை. இப்போது நாங்கள் இருப்பது இரவல் காணியில் தான் வளலாயில் அரச காணிகள் இருக்கின்றது. அந்த அரச காணிகளில் எங்களை இருக்க விட்டால் எங்களுக்கு ஒரு வித பிரச்சினையும் இல்லை எங்களுக்கு தொழில் செய்வதற்கு படகுகள் தந்து எங்களை வளலாயில் குடியமர்த்த வேண்டும் இதைத்தான் நாங்கள் அரசிடம் கேட்கின்றோம்.

நாங்கள் 1990 ஆம் ஆண்டு முதல் ஒரு நிலையான இடங்களில் இருக்க வில்லை மாறி மாறி அலைகின்றோம். எங்களுக்கு வீட்டுத் திட்டம் ஒன்று ஏற்படுமானால் அதனை வளலாய் அரச காணியில் ஏற்படுத்தி தந்தால் எங்களுக்கு அது பயனுள்ளதாகவே இருக்குமென்றார்.

மற்றும் எமக்கு அரச உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. மீன்பிடித் தொழிலைச் செய்ய வேண்டிய உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு சீருடைகள் கற்றல் உபகரணங்கள் எதுவும் கிடைககவில்லை அதேவேளை தமது சங்கத்திற்கு மூன்றரைக் கோடி ரூபா இழப்பீடு ஏற்பட்டதாகவும், தமது சங்கத்தைச் சேர்ந்த ஐவர் சுனாமியினால் இறந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (45)

## -கொழும்பிலிருந்து வந்திருந்த வேளை- யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட வானுடன் மூவர் கைது!

(வடமாரட்சி)

கொழும்பிலிருந்து யாழ்ப் பாணத்திற்கு வந்திருந்த வேளையில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் வான் ஒன்று யாழ்.பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது. இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் சுமார் 15 இலட்சம் பெறுமதியான ஹபின்ரா ரகத்தைச் சேர்ந்த வாகனமே கடத்தப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து பயணிகளுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த வேளையில் இவ் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. யாழ்நகரின் கஸ்தூரியார் வீதியிலுள்ள மதுபான நிலையமொன்றில் வைத்து சாரதியைத் தாக்கிய இளைஞர் குழு வானினைக் கடத்திச் சென்றதுடன் சாரதியிடமிருந்து அவரது கைத்தொலைபேசியினையும் பறித்துச் சென்றிருந்ததாகவும் பொலிசாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும இளைஞர்கள் ஐவரில் மூவர் யாழ்நகரப்பகுதியில் வைத்து பொலி சாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த வானும் மீட்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை யாழ் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் சாரதியின் கைத்தொலைபேசி மீட்கபபடவில்லையெனவும் பொலிசார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர் சந்தேக நபர்களை 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## பண்ணை வீதியின் அருகேயுள்ள கடற்பகுதியில் மீன்பிடிக்க சிறிலங்காப் படையினர் அனுமதி மறுப்பு!

(வடமராட்சி)

பண்ணைவீதியின் இரு ஓரங்களில் இருந்தும் 100 மீற்றர் தூரப் பகுதியினுள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதியினை வழங்க முடியாதென வடபிராந்திய கடற்படைத்தலைமை அறிவித்துள்ளது. 1996 ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் உள்ளவாறாகவே அப்பகுதிகளில் மீன்பிடிகளில் தொடர்ந்து ஈடுபட முடியுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பண்ணை வீதியினை அண்டிய குடாக்கடற் பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் சிறிலங்காக் கடற்படையினரால் தாக்கப் பட்டிருந்தனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் இருவரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்திருந்த முறைப்பாடொன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே கடற்படைத்தரப்பு இவ்வாறு கூறியுள்ளது.

குறிப்பாக பண்ணைக் கடற்பரப்பில் தற்போது அமுலிலுள்ள நடைமுறைகளின் பிரகாரம் மீன்பிடித்தொழிலில் ஈடுபடமுடியும் எனினும் - பண்ணைவீதியின் இரு புறமும் 100 மீற்றர் தூரப்பகுதிக் கப்பாலே இவ்வாறு மீன்பிடியினில் ஈடுபடவேண்டுமெனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

எனினும் வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தினுள் மீன்பிடியில் ஈடுபட முடியாது எனக் கடற்படை கூறிவருகின்ற போதிலும் குறித்த எல்லைப்பகுதிகளை அடையாளப் படுத்தும் வகையில் கடற்படையால் நாட்டப்பட்டிருந்த எல்லைக்கம்பங்கள் அழிவுற்று விட்டதாக மீனவர்கள் தரப்பில் கூறப்படுகின்றது. இந்நிலையில் கடற்படையினர் கூறும் எல்லை எதுவென தெளிவாகத்தெரியாத நிலையில் மீனவர்கள் தவறிகுறிப்பிட்ட பகுதியினுள் சென்று விடுவதாகவும் அவ்வேளையில் கடற்படையினர் மீனவர்களைத் தொடர்ந்தும் தாக்கி வருவதாகவும் அம்மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (27)


# சிறு நீர்ப்பையை புற்று நோயை கண்டறிய புதிய தொழில்நுட்பம்

சிறு நீரகப்பை புற்று நோயை கண்டறிய சிஸ்டஸ் கோபி உள்ளிட்ட பல பரிசோதனை முறைகள் இருந் தாலும் எதையும் துல்லியமானது என்று சொல்ல முடியாது மேலும் இந்த சோ தனை முறைகளுக் கான செலவும் அதிகம். முடிவு தெரிய நேரமும் பிடிக்கும் .இந் நிலையில் சிறுநீரகப் பை புற் றுநோய் உள்ளதா? இல்லையா? என்று கண்டு பிடிக்க புதிய தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக சிறுநீரில் காணப் படும் NMP22 என்ற புரோட் டீன் அளவை வைத்து சந்தேகத் துக்கு இடமான கட்டிகள் இருக்கிறதா? இல்லையா? என் பதை சொல்லி விடலாம். அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பும் இதைத் தான் அங் கீ கா ரித் துள் ளது. இந்நிலையில் புதிய பரிசோ தனை முறையைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் இந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இருக் கிறார்கள். இந்தச் சோதனை முறை யில் ஓரிரு துளி சிறுநீர் போதும்.30 அல்லது 50 நிமிடங்களில் முடிவு தெரிந்து விடும். மருத்துவமனை யில் தங்க வேண்டிய அவசியமே இல்லை. இதனால் புற்று நோய் பாதித்த நோயாளிகளின் ஆயுட் காலம் அதிகரிக்கும்.

பொதுவாக புற்று நோயை எவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிக் கிறோமோ அந்தளவுக்கு வாழ் நாளை அதிகரிக்க முடியும். அதுபோன்ற பலன் சிறுநீரகப் பை புற்று நோயிலும் இருக்கிறது இருந்தாலும் சிறுநீரகப் பை புற்று நோயைப் பொறுத்தவரை புற்று நோய் செல்க்ள் பல்கிப் பெருகி வெளி அடுக்கை தாண்டிச் செல்லும் வரையில் எதுவும் தெரிவதில்லை இதனால் தாமதமாக கண்டுபிடிக் கப்படும் நிலையில் நோயாளியின் ஆயுளும் குறைந்து விடுகிறது. பெரும்பாலும் சிறு நீரில் ரத்தம் வெளியான பிறகே புற்று நோய் சந்தேகம் வரும். சிறுநீர்ப்பை அடுக் கில் சிறிய கமரா ஒன்றைப் பொருத்தி உண்மை நிலவரத்தை கண்டறி யலாம் இந்நோயினால் பெண்களைக் காட்டிலும் ஆண்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட ஆண் களுக்கு சிறுநீர்ப்பை புற்று நோய் வர நிறைய வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக டை மற்றும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட ஒரு வேதிப் பொருள் காரணமாகவும் சுற்றுச்சூழல் மற்றும் விஷத்தன்மை வாய்ந்த பொருள் சம்பந் தப்பட்ட தொழிலில் இருக்கும் ஆண் களுக்கு இந் நோய் வருவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. புகைப்பழக்கம் சிறு நீரகப் பை புற்று நோயை வருந்தி அழைக்கும். புகைப்பழக்கம் இல்லாதவர் களுடன் ஒப்பிடும் போது இப்பழக் கம் உள்ளவர்களுக்கு சிறு நீரகப் பை புற்றுநோய் வருவதற்கு 50 சதவீதம் கூடுதல் வாய்ப்பிருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள்.

# ரீவ்ஸ் பீஸன்ட் பறவை



இங்கு காணப்படும் "ரீவ்ஸ்- பீஸன்ட்" னப்படும் பறவை அதிகமாக மத்திய சீனாவில் காணப்படும் அபூர்வ பறவை யினமாகும்.


இவை அடர்ந்த மலைக் காடு களில் வசிக்கின்றன. தானியங்களையும், தாவரங்களையும், சிறு பிராணிகளையும் இவை உண்டு வாழ்கின்றன. அவற்றின் பிறப்பிடம் சீனா என்றாலும் பின்னைய காலத்தில் அமெரிக்கா,பிரிட்டன், மற்றும ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவின. இப்பறவையினங்களில் பெண்பறவைக்கு அழகிய ஏறத்தாழ ஐந்து அடி நீளமான வால் காணப்படுகின்றது. எனினும் இந்தளவு நீளமான வால் அவை உயரப் பறப்பதற்கு இடைஞ்சலாகக் காணப்படு கின்றது. இந்த நீண்ட வால் ஏன் இந்தப் பறவைக்கு இருக்கிறது என்பது பற்றி ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர் அவற் றின் நீண்ட வாலில் கறுப்பு, வெள்ளை, பொன் நிறங்கள் கலந்து காணப் படுகின்றன. இவை அலங்கார வேலைகளுக்கு பயன்படுகின்றன.

# 20 வருடங்களின் பின் வாய் திறந்து பேசிய பெண்

அமெரிக்காவில் 20 வருடங்களுக்கு முன் நடந்த ஒரு விபத்தில் சிக்கி மூளை கடுமையாகப் பாதிக் கப்பட்ட இளம்பெண்20 வருடங் களுக்குப் பிறகு வாய் திறந்து பேசியுள் ளார். இதனால் அவரது தாய், தந்தையும், உறவினர் களும் அளவிலா ஆனந்தம். அடைந்துள்ளனர்.

சாரா கேன்ட்லின் என்பது அந்த பெண்ணின் பெயர். அவர் கடந்த 1984 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி நண்பர் களுடன் ஒரு விழாவில் கலந்து கொணடு விட்டு தனது காரில் ஏறுவதற்காக நடந்து சென்ற போது குடி போதையில் இருந்த ஒருவர் ஓட்டி வந்த கார் மோதியது. இந்த எதிர் பாராத விபத்தில் சாரா கேன்ட்லினின் மூளை கடுமையாக பாதிக்கப் பட்டது. அவரது கழுத்து சதைகள் சேதமடைந்ததால் எதையும் விழுங்க முடிய வ்ல்லை பேச்சு வரவில்லை. ஏதாவது கேட்டால் ஆம் என்றால் ஒரு முறை கண்ணை மூடித் திறப்பார். இல்லை என்றால், 2முறை கண்ணை மூடித் திறப்பார். இது தான் அவரது ஒரே பாஷை உடலில் பல பாகங் களிலும்பலமாக அடிபட்ட தால் எல்லாமே கட்டிலில் தான் நடந்தது. இதனால் சொல்வதை அவர் புரிந்து கொள்கிறாரா? இல்லையா? என்பது கூட தெரியவி ல்லை. மருத்துவர்களும் சரி, அவரது பெற்றோர் களும் சரி, இனிமேல் அவர் பேசு வதற்கு வாய்ப்பே இல்லை என்று முடிவு செய்து விட்டனர்.

இந் நிலையில் யாருமே எதிர்பாராத வகையில் சாரா தற்போது வாய் திறந்து பேசி யுள்ளார் இது எப்படி சாத்திய மானது என்பது பற்றி மருத்து வர்களால் எதுவும் சொல்ல முடியவில்லை. 20 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சாரா வாய் திறந்து பேசி இருப்பது அவரது பெற்றோரை மகிழ்ச் சியில் திக்குமுக்காட வைத் துள்ளது.



இங்கு காணப் படும் பறவைக்கு இணையான பறவையினம் இது வரை காணப்பட வில்லை. இதன் நட வடிக்கை மூலம் இது ஒரு மூர்க்கத் தனமான பறவை இனமாகக் கருதப் படுகிறது வானத்தில் அதிக உய ரத்தில் பறக்கக் கூடிய தும் கால்களினால் இரையைக் காவிச் செல்வதுமான இது கடற் கொள்ளையன் எனக் கூறப்படுகிறது


இது ஆமை முட்டைகளையும் குஞ்சுகளையும் விசேடமாக மீன்களையும் உண்ணும். பறக்கும் போதே திடீரென தாழப்பறந்து இவற்றை அபகரிப்பதால் கடற் கொள்ளையன் என்று குறிப்பிடப்படுகிறது.

இந்துப் பறவையினம் மரங்களில்கூடுகட்டி வாழ்கின்றன.

இதன் ஆண் பறவை தனது கழுத்துப்பகுதியில் பை ஒன்று காற்று நிரப்பப்பட்டு அலங்கரித்திருக் கும். இவை மரங்களில் அமர்ந் திருக்கும் போதுமரம் பழுத்த பழங்களைக் கொண்டதாக காட்சியளிக்கும்.

இவை அமெரிக்காவிலும் கேப் வெர்ட் தீவுகளிலும் வசிக் கின்றன அவை வளர்க்கப்படும் போது மனிதர்களுடன் ஒத்து வாழும்.

# நவீனமயமாகும் கடல் ஆய்வுகள்




சுனாமி பேரழிவினைத் தொடர்ந்து உலகின் அனைத்து நாடுகளிலும் கடல் ஆய்வுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன கடல் உயிரி யல், வேதியக் கடலியல், இயற்பியக் கடலியல், கடலடி மண் ணியல், கடல் வானிலையியல் என அனைத்து துறைகளிலும் விரிவான ஆய்வுகள் தொடங்கி விட்டன.

சூரியனைச் சுற்றி வரும் கோள்களில் புவியில் மட்டுமே உயிரினங்கள் உள்ளன என்பது இன்றைய அறிவி யல் உலகின் அடிப்படைக் கருத்தாக உள்ளது. உயிரினங்களுக்கு இன்றிய மையாத் தேவையான நீர் பூமியில் மட்டுமே உயிரினங்கள் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது. மற்றக் கோள்களில்நீர் உள்ளதா? இல்லையா? என்று ஆய்வுகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. பூமியில் ஏறத் தாழ 70.8 சதவீத அளவு கடல் நீர் பரவி உள்ளது. இதுவே சிறப்பான உயிரின வாழ்க்கைக்கு காரணமாகக் கருதப் படுகிறது.

தற்போது சுனாமியால் கடல் குறித்து புதிய பார்வையையும், சிந்தனையை யும் ஏற்படுத்தி உள்ளது. எல்லாக் காலங்களிலுமே ஆய்வுக்குரியதாக கடல் இருந்து வருகிறது. கடலின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1902 இல் அனைத்துலக கடலியல் கழகம் கடலில் வெவ்வேறு அறிவியல் பிரிவு களை ஒருங்கிணைத்து ஒரு தனி அறிவியல் பிரிவாக உருவாக்கக் கருதியது.

இந்தியாவில் முறை செய்யப்படாத கடல் ஆய்வுகள் 1882லேயே தொடங் கப்பட்டு விட்டன. ஆய்வாளர்கள் கடலை அதன் இயல்பான இயற் கையான போக்கில் ஆராயாமல் கடலை கடல் தரும் பொருட்களை எவ்வாறு முழுமையான அளவில் அதிக எண்ணிக்கையில் பெறுவது என்ற ரீதியிலேயே ஆய்வுகள் நடத் தினர். சுனாமி அலைகள் இதுவரை இருந்து வந்த ஆய்வுகளில் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது. தற்போது கடலியல் துறையில் உள்ள பல்வேறு பிரிவுகளில் இயற்பியக் கடலியல் என்ற பிரிவும் கடல் வானிலையில் என்ற பிரிவும் முடுக்கி விடப்பட்டுள்ளன. பெருங் கடல்களின் அலைகள் வெப்ப நிலை, அழுத்தம், நீரோட்டம் முதலியவற் றைப் பற்றிய செய்திகளை கடல் வானிலையியல் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது.

இந்தியாவில் கடல் ஆய்வு 1882 லேயே தொடங்கப்பட்டாலும் 1950ல் ஆந்திர பல்கலைக்கழகத் தில் முதன் முதலாக கடலியல் துறை தொடங் கப்பட்டது. பின்பு கொச்சி பல்கலைக்கழகம் பெங்களூர் பல் கலைக்கழகம், மகாராஷ்ட்ரா பல் கலைக்கழகம், சென்னைப் பல் கலைக்கழகம், ஆகியவற்றிலும் கடலியியல் துறை கள் தொடங்கப்பட்டன.

கடலைக் குறித்து ஆராய வேண்டி யவையும் கற்க வேண்டியவையும் இன்னும் கடல் அளவுக்கு இருக்கின் றது என்பதை சுனாமி சுட்டிக்காட்டி விட்டது.

# சரியான தீர்வை அரசு தரத்தவறின் நாமேதீர்வைப் பெற்றுக்கொள்வோம்

## -எழிலன் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை

**"சிறிலங்கா அரசு எமக்கான சரியான தீர்வைத் தரவேண்டும் இல்லையேல் அந்தத் தீர்வை நாமே பெற்றுக் கொள்ள நேரிடும்" என திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

சமாதான முன்னேற்ற நடு நிலையத்தினரால் நேற்று முன் தினம் திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்ட தையல் பயிற்சி நிலைய திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றும் போதே சி.எழிலன் இவ்வாறு தெரிவித்தார். சுனாமி கடல் அனர்த்த நிவாரண உதவி உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் சிறிலங்கா அரசு தமிழ மக்களைப் புறக்கணித்து வருகின்றது. சந்திரிகா அரசிற்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் உட்பூசல் தோன்றியுள்ளதாக ஒரு நிலையை ஏற்படுத்தி அதனூடாக தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்க சிறிலங்கா அரசு பின்னடித்து வருகின்றது. எனவே சிறிலங்கா அரசிடம் தமிழ் மக்கள் ஒருபோதும் தீர்வை எதிர்பார்க்க முடியாது எனவும் சி.எழிலன் மேலும் தெரிவித்தார். சமாதான முன்னேற்ற நிலையத்தினரால் அமைக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தை திருகோணமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். திருகோணமலை கட்டுக்கூனித்தீவு கிராமத்தில் திறந்து வைக்கப்பட்ட இந்தத் தையல் பயிற்சி நிலையம், தென்தமிழீழத்தில் இந்த நிறுவனத்தால் திறந்து வைக்கப்பட்ட முதலாவது தையல் பயிற்சி நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

## தெல்வத்த பகுதியில் மேலும் மூன்று சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட புகையிரதத்தில் பயணம் செய்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மிட்டியா கொடபொலிசார் அறிவித்துள்ளனர். புகையிரதம் சுனாமியின் தாக்குதலில் விபத்துக்குள்ளான தெல்வத்த பகுதியிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் மூன்று சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன. முட்டிவில் பிரதேசத்தில் நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட சடலங்கள் நீர்மட்டம் குறைவடைந்தமையைத் தொடர்ந்து வெளித்தெரிந்ததாக அறிவிக்கபடுகின்றது. இதேவேளை விபத்துக்குள்ளான இந்த புகையிரதத்தில் பயணம் செய்த பலரின் சடலங்கள் இந்தப் பகுதியில் சேற்றில் புதையுண்டிருக்கலாம் என அப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## நேபாள மன்னரின் செயல் குறித்து வடக்கு–கிழக்கு மனித உரிமைகள் அமைப்பு கவலை

(கிளிநொச்சி)

நேபாளத்தில் சனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் அரசியற்தலைவர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் நேபாள மன்னர் ஞானேந்திராவால் கைது செய்யப்பட்டமை தொடர்பாக வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஏனைய உலக நாடுகளுடன் இணைந்து இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டிப்பதோடு, அரசியற் கைதிகளையும் ஏனைய மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் உடனடியாக விடுதலை செய்யவும் சனநாயக அரசை மீள ஏற்படுத்தவும் கோரிக்கை விடுத்துள்ளது இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஒவ்வொருவரும் விடுவிக்கப்படவேண்டுமெனவும் வடக்குகிழக்கு மனித உரிமைகள் அமைப்பு நேபாளத்தில் மீண்டும் சனநாயகத்தை அமைதியாக நிறுவ[illegible] ஆதரவாகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

## பொகவந்தலாவையில் தீவிபத்து 50 கடைகள் எரிந்தன

மலையகத்தின் பொகவந்தலாவ நகரில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீயினால் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது இந்த தீவிபத்தின் போது சுமார் 50 கடைகள் வரை எரியுண்டன. இந்தக கடைகள் யாவும் தமிழர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது தீவிபத்துக்கான காரணம் எவையும் இதுவரை தெரியவில்லை

## 5 வருடங்களுக்கு மேல் ஆளுநர்களாக பணியாற்றியோருக்கு ஓய்வூதியம்

ஐந்து வருடங்களுக்கு மேல் ஆளுநர்களாகப் பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது. இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். 1988 ஆம் ஆண்டு ஏப்பிரல் 30 ஆம் திகதிக்குப் பின்னர் ஆளுநர்களாகப் பணியாற்றியவர்களே இதற்கு உரித்துரித துடையவர்களாவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# கண்காணிப்புக்குழு பூரணவிசாரணை நடத்தி உண்மையை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்

## -தமிழ் மாணவர் ஒன்றியம் மகஜரில் கோரிக்கை

மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட்ட நான்கு போராளிகளினதும், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவினதும் படுகொலை சிறிலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட செயல் என்பதனை நாம் தெளிவாகவும், உறுதியாகவும் கூற விரும்புகின்றோம் என்று தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணியின் முடிவில் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணிக்காகச் செல்லும்போது முன்னறிவித்தல் வழங்கவேண்டும் என்பது புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்படவில்லை. இதன்படியே விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் தமது அரசியல் பணிகளை காலங்காலமாக ஆற்றிவருகின்றனர்.

சம்பவதினத்தன்று லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட குழுவினர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு செல்லும்போது ஓமந்தை இராணுவச்சாவடியில் பதிவு செய்தமை மூலம் அவர்களின் வருகை உறுதிசெய்யப்பட்டே இக் கொலை வெறியாட்டம் மேற்கொள்ளப்பட்டதென்பது தெளிவாகப் புலனாகின்றது.

சிறிலங்கா இராணுவத்தின் இச்செயலுக்கு நாம் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். யுத்தநிறுத்த காலத்தில் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இப்படுகொலையானது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் முழுமையாகப் பாதிக்கும் என்பதையும் கூற விரும்புகின்றோம்.

இச்சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என இராணுவத் தரப்பு கூறுவது நகைப்பிற்கிடமானது. சிறிலங்கா இராணுவத்தின் காவலரண்களிற்கு இடையேயுள்ள பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது. எனவே இராணுவத்தின் ஒத்துழைப்பின்றி ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியிருக்க முடியாது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்த காலத்தில் இருந்து சிறிலங்கா இராணுவமானது மாறி மாறி தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. இவ்வாறான யுத்தநிறுத்த மீறல்களானது பொறுமையின் எல்லையில் நிற்கும் விடுதலைப்புலிகளை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் நடவடிக்கைகளாகவே நாம் கருதுகின்றோம். எனவே நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபடும புலி உறுப்பினர்கள் மீது நடாத்தப்படும் கோழைத்தனமான தாக்குதல்களை சிறிலங்கா இராணுவமானது உடன் நிறுத்தவேண்டும். இத்தகைய தாக்குதல்கள் தொடருமாயின் தமிழ் மக்கள் பொறுமை காக்க முடியாது.

ஆகவே நாம் எமது உரிமையைப் பெறுவதற்காக போராட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். எனவே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சிறிலங்கா இராணுவத்தின் இப்படுகொலைகளை பூரண விசாரணை செய்து உண்மையை உடனடியாக மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளியிடுவதுடன் இவ்வாறான சிறிலங்கா அரசின் யுத்தநிறுத்த மீறல்களிற்கு தடைவிதிக்க வேண்டுமென தமிழ் பேசும் மாணவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து வட மாகாண அதிபர்கள் சங்கம் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவிற்கு வழங்கிய மகஜரில், சமாதான உடன்படிக்கையின் பின்னர் விடுதலைப்புலிகள் ஆயுதமின்றி அரசி[illegible] வேலைகளிலும் மக்களுக்கான பணிகளிலும் ஈடுபட்டுவருவது உலகமறிந்தது. அதிலும் குறிப்பாக அண்மையில் சுனாமி அனர்த்தத்தில் அல்லற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் துயர் துடைப்பதையே முழு நோக்காகக் கொண்டு செயற்பட்டு வந்த வேளையில் கௌசல்யன் உட்பட்ட போராளிகளை திட்டமிட்டு படுகொலை செய்தமையானது எவ்வகையிலும் நியாயப் படுத்த முடியாத தொன்றாகும். பொறுமை காக்கும் புலிகளை சீண்டி மீண்டும் யுத்தத்திற்கு இழுக்கும் நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டியிருக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இராணுவத்தினராலும், தேசவிரோத சக்திகளாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் உச்சக்கட்டமாக கௌசல்யனின் கொலை அமைந்துள்ளது. இது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மாத்திரமன்றி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையையே ஆட்டங்காண வைக்கும் ஒரு சம்பவமாகும். இது தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சமாதான சக வாழ்வை விரும்பும் இலங்கையர் அனைவருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது மட்டுமன்றி சர்வ தேசத்தையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிக்கும் இத்தகைய கொடூரச்செயல்களின் பின்னணியில் அரசும், இராணுவப்படைகளும் இருப்பதாக தமிழ்பேசும் மக்கள் ஐயுறுகின்றனர். எனவே இக்கொலைகளை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் கொலைச் சூத்திரதாரிகளை வெளிக்கொணர இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். எனினும் இவ்வாறான சம்பவங்கள் இனியும் நடைபெறாமல் இருப்பதற்கு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்றும் வட மாகாண அதிபர்கள் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

யாழ்.மாவட்ட மகளிர்அமைப்புக்களின் ஒன்றியம் காண்காணிப்புக்குழுவிற்கு வழங்கிய மகஜரில்,

கடந்த காலத்தில் தமிழரின் உரிமைப்போராட்டத்தை அடக்குவதற்கும் இனஅழிப்பை மேற்கொள்ளவும் சிறிலங்கா அரசாங்கம் தந்திரோபாய நடவடிக்கையாக சமூகத்தளமாகிய பெண்களையே சிதைக்க முற்பட்டது. தமிழ்ப் பெண்களது உடல்உள இருப்பைச் சிதைத்து ஆற்றலை முடக்கு வதோடு அவர்களது வாழ்வையும் அரசாங்கத்தின் செயற்பாடு கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அத்தோடு, எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் தமிழ்ப் பெண்கள் ஆற்றல் இழந்தவர்களாக, நடமாடும் பிணங்களாக உருவாக்கவும் பேரினவாதம் முயன்றது. இத்தளம்பல் நிலைக்கு உள்ளாக்கப்படுவது தமிழ்ப்பெண்களை அதிகளவு பாதிப்பிற்குள்ளாக்கியது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தமிழர்களது வாழ்க்கையை இயல்பு நிலைக்குத் திருப்பும் என்ற இயல்பான எதிர்பார்ப்புடன் இருந்த தமிழ் மக்களுக்கு கடந்து போன மூன்று வருடங்களும் ஏமாற்றத்தையே தந்தது.

திணிக்கப்பட்டபோரினால் இன்னலுற்ற தமிழ் மக்கள் மீது சுனாமி பேரலை அனர்த்தமும் கவிழ்ந்தபொழுது தமிழீழ விடுதலைப்புலிகளே உடனடி மீட்புப்பணிகளிலும் நிவாரண வேலைகளிலும் ஈடுபட்டனர். இப்பணிகள் இன்றும் தொடர்கின்றன. ஆனால் பேரிடருக்கு முகம் கொடுக்கவும், தொடர் பணிகளில் ஈடுபடவும் சிறிலங்கா அரசாங்கம் பொறிஅமைப்புத் திறனை கொண்டிருக்கவில்லை. பேரினவாத அரசியல் கலாச்சாரத்தை அரவணைத்து ஆழ்ந்துபோயிருக்கும் சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச நிதி மற்றும் பொருள் உதவி வடக்கு -கிழக்கு மக்களுக்கு சென்றடைவதிலும் இன பாரபட்சமே காட்டுகின்றது. உதாரணமாக யாழ். மாவட்ட அரசாங்கத் தகவல்களின் பிரகாரம் 1250 பேர் இறந்துபோயிருக்க இதுவரையில் 355பேருக்கு மட்டுமே அரையும் குறையுமாக மரணக்கொடுப்பனவு வழங்கியுள்ளது. உலருணவு விநியோகமும் மிகச்சொற்பமே.

தலைமையுடன் நிவாரண செயறபாடுகள் குறித்து ஆலோசனையில் கலந்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த நிராயுத பாணிகளான மட்டு-அம்பாறை மாவட்டங்களின் அரசியல்துறைப்பொறுப்பாளர் கௌசல்யனும், உடன் சென்ற போராளிகளும், முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. சந்திரநேருவும் கோழைத்தனமாக கொல்லப்பட்டனர். இக்கொலைகளுக்கு அவை இடம்பெற்ற பிரதேசம் அரச கட்டுப்பாட்டுப்பகுதி என்ற வகையில் அரசாஙகமும் படைத் தரப்புமே பொறுபபெடுக்க வேண்டுமென்பது மட்டுமல்லாமல், கொலைகளில் சிறிலங்கா படைத் தரப்பினரது நேரடியான முழுப்பங்களிப்பு இருந்துள்ளதென்பது தெளிவுபட்டுள்ளது.இச்சம்பவம் குறித்து போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு பூரண விசாரணை நடத்தி உண்மையை வெளிக்கொண்டுவரவேண்டுமென அதில்கேட்கப்பட்டுள்ளது. (33)

# ஆழிப்பேரலையால் தமிழீழத்தில் 17,024பேர் உயிரிழப்பு; 7,198பேர் காயம்

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக யாழ்ப் பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோண மலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட் டங்களில் 17,024 பேர் உயிரிழந்துள்ளனர். 7,198 பேர் காயமடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 1,256 பேர் உயிரிழந் துள்ளதுடன் 1,647 பேர் காயமடைந்துள்ளனர். 41,013 பேர் வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். 11 பாடசாலைகள், 7,198 வீடுகள் உட்பட மூன்று மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் 670 பேர் காயமடைந்துள்ளனர். 1,603 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். 7,500 வீடுகள், ஒரு மருத்து வமனை என்பன சேதமடைந்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,771 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2,590 பேர் காயமடைந்துள்ளனர். 21,178 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். 12 பாடசாலைகள், 4,000 வீடுகள் உட்பட இரு மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன. திருகோணமலை மாவட் டத்தில் 1,076 பேர் உயிரிழந்துள்ளனர். 69,212 பேர் இடம்பெயர்ந் துள்ளனர். 23 பாடசாலைகள், 16,378 வீடுகள் உட்பட ஒன்பது மருத்து வமனைகள் சேதமடைந்துள்ளன. மட்டககளப்பு மாவட்டத்தில் 2,840 பேர் உயிரிழந்துள்ளதுடன் 1,575 பேர் காயமடைந்துள்ளனர். 61,912 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 36 பாடசாலைகள் 21,126 வீடுகள் உட்பட எட்டு மருத்துவமனைகள் சேத மடைந்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் 9,051 பேர் உயிரிழந்துள்ளதுடன் 6,771 பேர் காயமடைந்துள்ளனர். ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 960 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். 40 பாடசாலைகள், 29,077 வீடுகள், 29 மருத்துவமனைகள் சேதமடைந் துள்ளன என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரத்தின் அடிப்படையில் தெரியவருகின்றது.

## முஸ்லிம் மக்களைக் குறி வைத்து அதிரடிப்படை செயற்படுகிறது

### மனித உரிமைகள் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினர் முஸ் லிம் மக்களைக் குறி வைத்துச் செயற்படுவதாக மனித உரிமைகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. மத்திய கொழும்பு பகுதிக்கான மனித உரிமைகள் அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. முஸ்லிம் மக் களுக்கு விசேட அதிரடிப்படையினா தொடர்ந்து பெரும் தொல்லை களை ஏற்படுத்தி வருவதாக இந்த அமைப்பு குற்றம் சாட்டுகின்றது. இக் குற்றச்சாட்டை விசேட அதிரடிப் படையின் தளபதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் லீவ்கே மறுத்துள்ளார். (32)

## வவு.இல் பணமோசடி குறித்து கடந்தாண்டு 250 வழக்குகள்

(வவுனியா)

காசோலைகளைக் கொடுத்து பண மோசடி செய்யும் சம்பவங்கள் வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்த பொலிசார் 250க்கும் மேற்பட்ட வழக்குகளை வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இரண்டு பண மோசடியில் ஈடுபட்டவர்களிடமிருந்து இரண்டு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் மீட்கப்பட்டு நீதிமன்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. கிழமையொன்றில் 10 தொடக்கம் 15 வரையிலான பண மோசடி வழக்குகள் முன்னர் நீதிமன்றத்தினால் விசாரணை செய் யப்பட்டன. இது இப்போது கிழமை ஒன்றிற்கு ஒன்று அல்லது எப்போ தாவது இரண்டு வழக்காக குறைந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. (21).

## தம்புள்ள நீதிமன்றில் சந்தேக நபர்கள் நீதவான் மீது அசுத்தப்பொருளை வீசினர்

(வவுனியா)

தம்புள்ள நீதிமன்ற நீதவான் மீது சந்தேக நபர்கள் இருவர் அசுத்தப் பொருளை எறிந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இது நேற்று முன்தினம் முற்பகல் இடம் பெற்றதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்குள்ளான இரு வர் நேற்றுமுன்தினம் பொலிசாரால் விளக்கமறியலில் இருந்து மன் றிற்கு அழைத்துவரப்பட்டனர். இந்த நிலையில் குறிப்பிட்ட இருவ ரும் நீதவான் மதிய போசனத்துக் காக தமது இருக்கையில் இருந்து எழுந்திருந்த போது தாம் மறைத்து வைத்திருந்த அசுத்தப் பொருளை அவர் மீது எறிந்துள்ளனர் இதனை யடுத்து இருவருக்கும் ஒன்றரை வருடக்கால சிறைத்தண்டனையை நீதவான் விதித்தார்.

ஏற்கனவே இவ்வாறான சம்ப வம் ஒன்று நீதிமன்றத்தில் இடம் பெற்றிருந்த நிலையில் இதற்கான பொறுப்பை சிறை அதிகாரிகளே ஏற்க வேண்டும் என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. (21)

## ஐக்கிய மக்கள் சு.கூட்டமைப்பு ஒரு போதும் பிளவடைய மாட்டாது

### -அமைச்சர் மங்கள சமரவீர அறிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஒருபோதும் பிளவடையாது என அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக அரசாங்கத்திற்குள் இடம்பெற்றுவரும் முறுகல் நிலை தொடர்பில் மங்கள சமரவீர அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அரசாங்கம் கவிழ்ந்து விடும் எனப் பலர் எண்ணி வருவதாகவும், அவ் வாறான சூழல் ஒருபோதும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் தமது கூட்டணிக்கு வழங்கிய ஆணையினைத்தாம் ஒருபோதும் மீறப்போவதில்லை என்றும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன் னெடுக்கும் என்றும் மங்கள சமரவீர உறுதியளித்துள்ளார். (32)


## பேருந்து தரிப்பு நிலையங்களில் "நிழற்குடை" அமைத்தல்

மேற்படி குடைகள் அமைக்கும் முகமாக தமிழீழப் போக்குவரவுக்கழக நடுவப் பணிமனை பரந்தன்-முல்லைத்தீவு தெருவில் 156 இடங்களைத் தெரிவு செய்துள்ளது.

இவ்விடங்களில் மேற்படி குடைகளை தங்கள் உறவினர்களின் நினைவாக அமைத்துத் தர விரும்பும் பொது மக்கள் 10.03.2005 ஆம் நாளிற்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
தமிழீழப் போக்குவரவுக்கழகம்
நடுவப்பணிமனை,
றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகே
விசுவமடு.

பொறுப்பாளர்,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.11342)


## ஐ.ம.சுதந்திர முன்னணியில் பிளவு ஏற்பட அனுமதிக்கப்போவதில்லையென்கிறார் அநுரா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியில் பிளவுகள் ஏதும் ஏற்பட ஒரு போதும் தான் அனுமதிக்கப் போவதில்லை என அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித் துள்ளார். முரண்பாடுகள் உள்ளன அதனை இல்லை என்று கூற வில்லை. முரண்பாடுகள் இருந் தாலும் அவை தீர்க்கப் முடியா தவை அல்ல 'எனத் தெரிவித்த அநுரா பண்டாரநாயக்கா, சிறி லங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி. பி.க்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகள் பேசித் தீர்க்க முடி யாதவை அல்ல எனக் குறிப் பிட்டுள்ளார். கட்டாயமாக இந்த முரண்பாட்டைத் தீர்க்க முடியும் அரசாங்கத்தைக் கவிழ விடமாட் டோம். இந்த அரசாங்கம் 6 வரு டங்கள் ஆட்சியில் இருக்கும். எந்த முரண்பாடு இருந்தாலும் மக்கள் தமது முன்னணியில் பிளவு ஏற்பட விடமாட்டார்கள். மக்கள் இந்த முன்னணியில் நம்பிக்கை இருப்ப தால்த் தான் கடந்த இரண்டு தேர் தலிலும் தமக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தனர். மற்றவர் களைப் பற்றி எனக்குத் தெரியாது எனத் தெரிவித்த அநுரா பண்டார நாயக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த முன்னணியில் இருந்து விலக ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித் துள்ளார். (32)

## மின்சார சபைச் செயலர் பணிநீக்கம் செய்யப்படுவார்

### - அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை யினை தனியார் மயப்படுத்தும் திட் டத்திற்கு முன்னுரிமை வழங்கி வரும் சபையின் செயலரை பணி நீக்கம் செய்யப் போவதாக எரி சக்தி மின்வலுத்துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த உறுதியளித் துள்ளார்.

அமைச்சருக்கும் மின்சார சபைதொழிற்சங்கத்துக்கும் இடை யில் நேற்று முன்தினம் பேச்சு வார்த்தை ஒன்று இடம்பெற்றது.

இதன் போது பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனியார் மயக் கொள்கை பிரே ரணையை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தொழிற் சங்கத்தினர் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு அமைச்சர் சாதக மான பதில் வழங்கியதாக தொழிற் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சமயா சமய ஊழியர்களாக உள்ள 1500 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க வும் அமைச்சர் இந்த சந்திப்பின் போது உறுதியளித்துள்ளார். இதே வேளை இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முன்தினம் மின்சார சபை ஊழியர்கள் போராட்டம் ஒன்றை நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பொலிசாரின் விசாரணைக்கு மறுத்த சந்தேக நபருக்கு நீதவான் எச்சரிக்கை

நீதிமன்ற ஆணை ஒன்று பிறப் பிக்கப்பட்டு இருக்கையில் பொலி சாரிடம் வாக்கு மூலம் கொடுக்க மறுத்த மொஹமட் நியாஸ் நவ்பர் என்ற சந்தேகநபருக்கு கொழும்பு பிரதம நீதவான் சறோஜினி குசலா வீரவர்த்தன எச்சரிக்கை விடுத் துள்ளார், மேல் நீதிமன்ற நீதவான் சரத் அம்பேப் பிட்டிய கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான மொஹமட் நியாஸ் நவ்பர் தம்மிடம் வாக்குமூலம் வழங்க மறுத்ததாக கொழும்பு குற்றத்தடுப்புப் பரிவினர் பிரதம நீதவானிடம் முறையிட்டனர். இதன் மூலம் சந் தேக நபர் நீதிமன்றை அவமதித் ததாகவும் நீதவான் தெரிவித் துள்ளார்.

இந்த நிலையில் மகர சிறைச் சாலையில் சந்தேக நபரிடம் வாக்குமூலத்தை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர் களுக்கு நீதவான் பணித்துள்ளார். இதேவேளை கொழும்பு நீதிமன்ற நீதவான் சறோஜினி குசலா வீர வர்த்தன தொடர்பான தகவல்களை அறிய முற்பட்ட தொலைபேசி அழைப்புக் குறித்தவிசாரணை களை பொலிசார் ஆரம்பித்துள் ளனர். (32)


## கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி நெறி 38A முறைசாராக்கல்வி – 2005

கிளி/கல்வி வலயத்தின் முறைசாராக்கல்விப் பிரிவு நடை முறைப்படுத்தும் மேற்படி பயிற்சி நெறி 01.03.2005 ஆரம்பமாக உள்ளதால் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 25.02.2005 இற்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

ஆரம்ப ஒன்று கூடல் நிகழ்வு 27.02.2005 ஞாயிறு மாலை 4.00 மணி கிளி/மத்திய கல்லூரி.

*R.Raiamahenthiran*
*Principal*
*Kilinochchi Central College*
*Kilinochchi.*

(சி.11335)

# ஜெயலலிதா இந்த நாட்டின் பிரதமர் அல்ல ஐந்து ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியிலிருக்கும்

## -காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கருத்து

ஜெயலலிதா ஒரு மாநில முதலமைச்சர்தான்.இந்த நாட்டின் பிரதமர் அல்ல. பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஐந்து ஆண்டு காலத்துக்கு முழுமையாகப் பதவியில் நீடிக்கும் முன்கூட்டியே பாராளுமன்றத்தேர்தல் வராது என்று காங்கிரஸ்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெயந்திநடராஜன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், வருங்காலத்தில் சட்டமன்றத் தேர்தலின்போது மின்னணு இயந்திரத்திற்குப் பதிலாக மீண்டும் வாக்குச் சீட்டு முறையைக் கொண்டுவர வேண்டும்என்றும் தமிழக முதலமைச்சர் கருத்துத்தெரிவித்திருக்கிறார்.

கடந்த [illegible]ாளுமன்றத்தேர்தலை தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையில் காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சிகள் நேர்மையாக சந்தித்து அமோக வெற்றிபெற்றது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் மின்னணு இயந்திரவாக்குப்பதிவால் குளறுபடி நடந்ததாக கூறும்முதலமைச்சருக்கு கடந்த தமிழக சட்டசபைத் தேர்தலிலும் இதே மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்தான் பயன்படுத்தப்பட்டது என்பதை சுட்டிக் காட்டவிரும்புகிறேன். அ.தி.மு.கவின் வெற்றியை மனதில் கொண்டு இதுபோன்ற தவறான கருத்துக்களை வெளியிடுவது தேவையற்றது.

குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகள் திட்டம் பற்றி விசுவ இந்து பரிஷத் கூறிய தவறான கருத்து கண்டிக்கத்தக்கது. மதச்சார்பற்ற ஒரு கொள்கைத் திட்டத்தை மதச்சார்புத்திட்டம் என்று அவர்கள் கூறுவது வருந்தத்தக்கது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் இரண்டு குழந்தைகள் திட்டம் கொண்டு வரப்பட்டது.

சட்டசபைத்தேர்தல் நடைபெறும் மூன்று மாநிலங்களிலும் காங்கிரஸ் அல்லது காங்கிரசின் கூட்டணிக்கட்சி நிச்சயம் ஆட்சியைப்பிடிக்கும் பீகாரில் தொங்கு சட்டசபை வராது. எங்கள் கூட்டணி ஆதரவு அளிக்கும் கட்சி அங்கு ஆட்சியமைக்கும் என்று நம்புகிறேன் என்று கூறினார்.

# உலக வீதி விபத்துக்களில் 6 வீதம் இந்தியாவில் நடக்கிறது

(புதுடில்லி)

உலகிலேயே வீதிவிபத்துக்கள் அதிகம் நடக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று உலகம் முழுவதும் நடக்கும் மொத்த விபத்துக்களில் ஆறு சதவீத விபத்துக்கள் இந்தியாவில் நடக்கின்றன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.மும்பையில் இந்திய தொழில்நுட்ப மையத்தின் சார்பில் வீதிப்பாதுகாப்புக் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேராசிரியர் சித்கர் பேசியதாவது ;

உலகிலுள்ள மொத்த வாகனங்களில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே இந்தியாவில் வாகனங்கள் உள்ளன. இருந்தபோதிலும் உலகெங்கும் நடக்கும் மொத்த வீதி விபத்துக்களில் ஆறுசதவீத விபத்துக்கள் இந்தியாவில் நடக்கின்றன எனக் கூறினார்.


**கிளி/ மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்-(வ/து)**

செல்வாநகர், கிளிநொச்சி

**ஆலைப் பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை**
**23.02.2005 புதன்கிழமை முற்பகல் 11.00 மணி**

மேற்படி விடயம் தொடர்பாக அரிசி ஆலைக்கான பொறிகள் , கூரைக்குப் பாவிக்கப்பட்ட தடிகள், கதவுகள் உட்பட 23 வகையான பொருட்கள் பகிரங்க ஏலத்தில் மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறிப்பு:- இப்பொருட்களைப் பார்வையிட விரும்பு வோர் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பார்வை யிடலாம்

தலைவர்,
கிளி. மாவட்ட கூட்டுறவுச்
சங்கங்களின் ஒன்றியம்.

(சி.11439)



**கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் – (வ/து)**
**செல்வாநகர் கிளிநொச்சி**

**வர்த்தக முகாமையாளர் பதவி வெற்றிடம் (தற்காலிகம்)**

கீழ்க்குறிப்பிடப்படும் வர்த்தக முகாமையாளர் பதவிக்கு 18-45 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி - வர்த்தக முகாமையாளர் வெற்றிடம் - 01

குறியீட்டு இல - 106/9

சம்பள அளவுத்திட்டம் - 31/99 [அமைவாக] 5000 - 7300 / 110X10 120X10 + 1250

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

[அ] கூட்டுறவு பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்டதுறையிலான பதவியில் 02 வருடங்களிற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] கூட்டுறவு பணியாளர் [உயர்தரம்] பத்திரம்/ க.பொ.த. [உயர்தரம்] த்தில் 03 பாடங்களில் சித்தியுடன், வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல்/விநியோகித்தல் மேற்பார்வை மட்டத்திலான துறையிலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

குறிப்பு- கிளி/மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் முழுப்பெயர், முகவரி: பிறந்த திகதி, அ.அ.இல. கல்வித்தகைமைகள், தொழில் அனுபவச் சான்றிதழ், நற்சான்றுப்பத்திரங்கள் ஆகியவை அடங்கிய சுயவிபரங்களுடன் 24.02.2005திற்குள் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காண் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்
கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்,
செல்வாநகர், கிளிநொச்சி.

(சி-11438)



இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

**மாபெரும் பரிசுப்போட்டி**

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

**அம்மன் களஞ்சியம்**
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)






**நெஸ்டமோல்ட் 30 கிராம் வெற்றுப்பக்கற்றுக்கும் பரிசு!**

நெஸ்டமோல்ட் 30 கிராம்
வெற்றுப்பக்கற்றுக்கள் 350 சேகரித்து விநியோக வாகனங்களிலோ அல்லது
அம்மன் களஞ்சியத்திலோ ஒப்படைப்பதன் மூலம்
ஒரு பெரிய நெஸ்டமோல்ட் குடை அல்லது 150 வெற்றுப் பக்கற்றுக்களைச்
சேகரித்து ஒரு நெஸ்டமோல்ட் தொப்பியினையும்
அன்பளிப்பாக உடன் பெற்றுக்கொள்ளுங்கள்.







வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்!

**அம்மன் களஞ்சியம்**
யாழ்சாலை, கிளிநொச்சி- 021-228 5852,5077


(சி-11150)





20இற்கு 20 ஓவர் ஒரு நாள் போட்டி

# ரிக்கி பொண்டிங், கஸ்பரோவிச் அபாரம் நியூசிலாந்தை 44 ஓட்டத்தால் வீழ்த்தியது அவுஸ்





55 பந்துகளில் ஆட்டமிழக்காமல் ரிக்கி பொண்டிங் பெற்ற 98 ஓட்டங்களின் மூலம் நியூசிலாந்துடன் நடைபெற்ற "20இற்கு 20" ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா 44 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நியூசிலாந்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஐந்து விக்கெட் இழப்பிற்கு 214 ஓட்டங்களைப் பெற்றது. ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட் இழப்பிற்கு 54 ஓட்டங்களை மட்டுமே அவ்வணி பெற்றிருந்தது. எனினும், ரிக்கி பொண்டிங் மைக் ஹசி ஆகியோரின் அதிரடி ஆட்டத்தினாலும் சைமன் கட்டிச் பெற்ற 30 ஓட்டங்களினாலும் 20 ஓவர் முடிவில் அவுஸ்திரேலியா 214 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்கு 215 என்ற வெற்றிநோக்கி ஆட்டத்தைத் தொடங்கிய நியூசிலாந்தின் கனவை மைக்கல் கஸ்பரோவிச் நிர்மூலமாக்கினார். அவர் 29 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அவ்வணியின் ஸ்கொட் ஸ்ரைரிஸ் 66 ஓட்டங் களைப் பெற்றார். 20 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மட்டுமே நியூசிலாந்து பெற்றது. பிளெமிங் 18 ஓட்டங்களுடனும், சின் கிளெயர் ஓட்டம்பெறாமலும் ஆட்டமிழந்தனர். கிறிஸ் கெயான்ஸ் மூன்று ஓட்டங்களைப் பெற்றார். ஜெப் வில்சன் சிறப்பாக ஆடி 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இவரும் கைல் மில்சும் கடைசி ஓவரில் மெக்ராத்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். இப்போட்டியில் அவுஸ்திரேலியாவின் யேசன் கிளெஸ்பி, மத்தியூஹெய்டன் ஆகியோர்இடம்பெறவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து கிரிக்கெட் அணி பயிற்சியாளராக டொம் மூடி பணியாற்ற விருப்பம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து டங்கன் பிளச்சர் விலகியதையடுத்து அவுஸ்திரேலியாவின் டொம் மூடி அப்பதவிக்கு வரவிருப்பம் தெரிவித்துள்ளார். பிளச்சர் சுழற்சி முறையில் ஒப்பந்தம் செய்திருக்கிறார். அவரின் கடைசிப் போட்டி ஆஷஸ் தொடராக இருக்கலாம் எனினும், அவர் 2007ஆம் ஆண்டின் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கும் பயிற்சியளிப்பார். பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிடும்போது, 2007 உலகக் கிண்ணம் பெரும் சவால் மிக்கதாகும் எனத் தெரிவித்தார். அவர் கடந்த ஐந்து வருடங்களாக இங்கிலாந்து அணிக்குப் பயிற்சியளித்து வருகிறார்.

தற்போது நியூசிலாந்து பயிற்சியாளராக இருக்கும் டொம் மூடியின் பயிற்சிக்காலம் வரும் அவுஸ்திரேலிய அணியுடனான ஆஷஸ் போட்டி முடிவில் முடிவுக்குவரும். அதேவேளை, அவுஸ்திரேலிய பயிற்றுநர் புக்கானனின் பயிற்சி காலமும் ஆஷஸ் தொடருடன் முடிவுக்கு வரும். அவர் பின்னர் தென்னாபிரிக்கப் பயிற்சியாளராவார்.

76 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள மூடி இங்கிலாந்து அணி வோனின் தலைமையிலும் பிளச்சரின் பயிற்சியிலும் சிறந்து விளங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டு நாசர் ஹுசைனின் இடத்தைப் பிடித்த மைக்கல்வோன் அணியின் அனைத்து வீரர்களும் திறமையைப் பெறுவர் என்றும், இளையவர் அனுபவ வீரர் அனைவரினதும் பாராட்டைப் பெறுபவர் என்றும் தெரிவித்துள்ளார்.

## அக்தர் ஆடாது விட்டாலும் பாகிஸ்தானுக்குப் பாதிப்பு இல்லை



ரோட்ஸ்

இந்தியா-பாகிஸ்தான் தொடர் இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. இரு அணியிலுமே தலை சிறந்த வீரர்கள் உள்ளனர். இதனால் தொடர் விறுவிறுப்பாக இருக்காது. உள்ளூர் மைதானத்தில் ஆடுவது இந்தியாவுக்கு கூடுதல் வாய்ப்பு என தென்னாபிரிக்க வீரர் ஜொன்டிரோட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலுள்ள ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு அவ்வளவாக எடுபடாது. இதனால் சொஹைப் அக்தர் தொடரில் ஆடாவிட்டாலும் பாகிஸ்தான் அணிக்குப் பாதிப்பு ஏற்படாது.

இந்தியாவின் வெற்றிக்கு சுழற்பந்து வீச்சும், இடதுகை வேகப்பந்து வீச்சும் முக்கிய காரணமாக இருக்கும்.

அவுஸ்திரேலியா உலகின் தலை சிறந்த அணியாக இருக்கிறது. அந்த அணியில் உள்ள நான்கு அல்லது ஐந்து வீரர்கள் ஓய்வு நிலையில் உள்ளனர். அவர்கள் ஓய்வு பெறும்போது அவுஸ்திரேலியாவின் ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிடும். இனி வரக்கூடிய வீரர்களால் அவுஸ்திரேலியா சிறந்து விளங்க முடியாது. தற்போது வந்துள்ள வீரர்களில் கிளார்க் சிறப்பாக ஆடுகிறார். என்றாலும் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர இயலாது.

சிம்பாப்வே பங்களாதேஷ் அணிகள் டெஸ்ட் போட்டிகளில் சரியாக ஆடவில்லை. இதனால் அந்த அணிகளின் டெஸ்ட் அங்கீகாரத்தை ரத்துச் செய்வது நல்லது இவ்வாறு ரோட்ஸ் கூறினார்.






முன்னாள் பிரபல கால்பந்து வீரர் டிகோ மரடோனா ஓய்வுக்காக கொலம்பியா சென்றார். ரசிகர்களைப் பார்த்து அவர் கும்பிட்டு வாழ்த்துத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## அதிக ஓட்டங்களைக் குவித்தாலே இந்திய அணியில் இடம்பெற முடியும்

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிக்கான இந்திய கிரிக்கெட் அணி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. துலீப் கோப்பை போட்டியில் வீரர்களின் திறனைப் பார்த்து அணி தேர் செய்யப்படுகிறது. - மொங்கியா

இந்த நிலையில் துலீப் போட்டியில் ஆடி வரும் தினேஷ் மொங்கியா இந்தப் போட்டியில் அதிக ஓட்டம் குவித்தால்தான் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் தன்னால் இடம் பிடிக்க முடியும் என்று கூறினார். ஒரு நாள் போட்டியில் இடம் கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## இங்கிலாந்து வீரர் அன்ருபிளின்டொப் காயத்திலிருந்து குணமடைந்து வருகிறார்



இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் அன்ரு பிளின்டொப் குதிக்காலில் ஏற்பட்ட காயத்துக்கு அளிக்கப்பட்டசத்திரசிகிச்சையிலிருந்து குணமடைந்து வருகிறார். அத்துடன் அவர் மே மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகும் பங்களாதேசுடனான போட்டியில் பங்கேற்பார். அத்துடன் அவர் எவ்வளவு விரைவாகப் போட்டிகளில் கலந்து கொள்வார் என்பதைக்கூற முடியாது என அவரின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். எனினும் பங்களாதேசுடனான போட்டிகளில் அவரைத் தவிர்த்து அதன் பின்னர் நடைபெறும் ஆஷஸ் தொடர் மற்றும் நட்வெஸ்ட் தொடர் ஆகிய போட்டிகளில் ஆடுவதை அவரது முகாமையாளர் உறுதி செய்துள்ளார்.

## டென்னிஸ் வீராங்கனை சானியாவுக்கு 24 மணி நேர பொலிஸ் பாதுகாப்பு



டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சாவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது அம்மாநில காவல்துறை.

அவுஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு முன்பே பலத்த ரசிகர்களைக் கொண்ட சானியா, அப்போட்டியில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறி சாதனை படைத்ததும் ரசிகர்களின் கவனத்தை மேலும் ஈர்த்தார். இதனால் எங்கு சென்றாலும் ரசிகர்கள் கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது. பல சமயங்களில் அவரால் சமாளிக்க முடியவில்லை.

இந்நிலையில் ஹைதராபாத்தில் சமீபத்தில் உலக மகளிர் டென்னிஸ் பட்டத்தை வென்றது அந்நகரே அவரை எளிதில் அடையாளம் காண வைத்துள்ளது.

இதையடுத்து வெளியில் மட்டுமல்லாது வீட்டிலும் அவருக்குத் தொந்தரவுகள் அதிகரித்தன. கணுக்கால் காயத்திலிருந்து நிவாரணம் பெற முடியாத வகையில் தொல்லைகள் அதிகரித்தன. அடையாளம் தெரியாத ஒருவர் சமீபத்தில் வீட்டுச் சுவரில் ஏறி உள்ளே வர முயன்றுள்ளார். இந்நிலையில், நகர காவல்துறை ஆணையர் தினேஷ் ரெட்டியைச் சந்தித்துப் பாதுகாப்பு அளிக்குமாறு கோரிக்கை விடுத்தார். சானியாவின் தாய் நசீமா. அவரது கோரிக்கையை ஏற்று உடனடியாக 24 மணி நேரமும் பாதுகாப்பு அளிக்கும் விதமாக அதிகாரிகளை நியமித்துள்ளார் ரெட்டி.



ஆபிரிக்க கால்பந்து கூட்டமைப்பின் சிறந்த வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் நைஜிரியாவைச் சேர்ந்த பெர்பெசுவா குவோச்சா தென்னாபிரிக்காவின் டார்பனில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்ட கோப்பையை முத்தமிட்டு மகிழ்கிறார் குவோச்சா.

## கரைச்சிப் பிரதேச வி.கழகங்களுக்கான சந்திப்பு நாளை கிளிநொச்சியில்

கரைச்சிப் பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அனைத்து விளையாட்டுக்கழகங்களுக்குமான சந்திப்பு எதிர்வரும் 19ஆம் திகதியன்று கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பதிவு செய்யப்படாத விளையாட்டுக் கழகங்களுக்கு அன்றையதினம் பிற்பகல் 3.00 மணிக்கும், பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு அன்றைய தினம் பிற்பகல் 4.00 மணிக்கும் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதென கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் த. ராஜா தெரிவித்துள்ளார். (சோ)

## கேணல் சங்கர் வலுவூட்டல் நிலையம் கிளிநொச்சியில் நாளைதிறந்து வைப்பு


கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையம் (Colonel Shankar Mega Gym. Body Care & Fitness Centre.) யாழ்சாலை கிளிநொச்சியில் நாளை (19-02-2005) முதல் செயற்படவுள்ளது.

மேற்படி நிலையத்தில் பயிற்சி பெற விரும்புபவர்கள் பயிற்றுநர் வீ.தேவராஜாவுடன், இளையோர் செயற்பாட்டு நிறுவன அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்குமான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 20.02.2005 மாலை 3.00 மணியளவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் அனைத்துக் கழக தலைவர், செயலாளர், பொருளாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

## சிந்தனைக்கு



நாம் உறுதியுடன் தொடர்ந்தும் போராடுவோம்; எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-02-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஐ.நா.செயலருக்கு எதிராகக் கூச்சல்!

ஐ.நா பொதுச் செயலாளருக்கும், ஐ.நா. கொழும்பு வதிவிடப் பிரதிநிதி போர்மிங்காமிற்கும் எதிராக சிங்களப் பேரினவாதம் கிளர்ந்தெழுந்துள்ளது. ஐ.நா செயலாளரின் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவிக்கவேண்டும், கொழும்பு வதிவிடப் பிரதிநிதியை நாடு கடத்த வேண்டும் எனக் கோரும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

இத்தனைக்கும் காரணம் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஏனையோரின் படுகொலைகளை ஐ.நா.செயலாளர் கண்டித்தமையும் கொல்லப்பட்டோருக்கு அனுதாபம் தெரிவித்தமையுமே ஆகும். அத்தோடு ஐ.நா.வதிவிடப்பிரதிநிதி விடுதலைப்புலிகளுக்குச் சார்பானவர் என்பதான குற்றச்சாட்டும் ஆகும். ஐ.நா.செயலாளர் மற்றும் கொழும்பு வதிவிடப்பிரதிநிதிகள் மீது சிங்களப் பேரினவாதம் ஆத்திரம் கொண்டுள்ளமைக்குத் தனியாக இவ்விவகாரம் காரணமல்ல. இதற்கு முன்னதாகவே இப்புகைச்சல் எழ ஆரம்பித்துவிட்டது.

ஐ.நா செயலாளர் கொபிஅனான் சுனாமித் தாக்கத்தின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரை முல்லைத்தீவிற்கு செல்ல விடாது தடுத்ததில் சிங்களப் பேரினவாதம் பெரிதும் மகிழ்ந்திருந்தது. ஆயினும் இம் மகிழ்ச்சி அதற்கு நீடித்ததாக இருக்கவில்லை. ஏனெனில் கொழும்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் றெஜியை கொபிஅனான் சந்தித்தமையும், புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமி அனர்த்த சேவையைப் பாராட்டியதும் அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

இந்நிலையில் ஒரு புறம் கொபிஅனானின் விஜயத்தில் மகிழ்ச்சி கொண்டாலும், மறுபுறத்தில் கோட்டைவிட்டுவிட்டதாகவே அவர்கள் கருதினர். அரசாங்கம் இவ்விடயத்தில் விழிப்புடன் நடந்து கொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினர். ஆயினும் அதற்கு மேற்பட்ட விதத்தில் அவர்கள் சீற்றத்தை வெளிப்படுத்தவில்லை. ஆனால் அதன் பின்னர் இ.கௌசல்யனினதும், ஏனையோரினதும் படுகொலைகளுக்குக் கண்டனமும் இரங்கலும் தெரிவித்தமை பேரினவாத சக்திகளுக்கு சீற்றத்தை ஏற்படுத்திவிட்டது. புகைத்துக் கொண்டிருந்தது எரிய ஆரம்பித்து விட்டது. இது இலங்கையின் இறைமைக்கு எதிரானது எனவும், விடுதலைப்புலிகளுக்குச் சர்வதேச அங்கீகாரத்தை வழங்குவதாக அமையும் என்பதுமே அவர்களின் குற்றச்சாட்டிற்குக் காரணமாகும்.

இத்தனைக்கும் ஐ.நா செயலாளரோ, அவரது சார்பில் பேசிய கொழும்பு வதிவிடப்பிரதிநிதியோ இக்கொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்திருப்பினும் அரசின் மீதோஅன்றி அரசைச்சார்ந்தவர்கள் மீதோ குற்றம் சாட்டவில்லை. அது மட்டுமல்ல படுகொலை செய்யப்பட்ட கௌசல்யன் உட்பட ஏனையோரின் குடும்பங்களுக்கே ஐ.நா செயலாளர் அனுதாபம் தெரிவித்திருந்தார். மேலும் ஐ.நா செயலாளர் தமது செய்தியில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், யுத்த நிறுத்த உடன்பாடு பேணப்படவேண்டும் என்றுமே கோரியுள்ளார். அதாவது இப்படுகொலை யுத்தமொன்றிற்கு இட்டுச் சென்றுவிடக் கூடாது என்ற கவலையையே தெரிவித்தார்.

இவ்வாறு இருந்தும் சிங்களப் பேரினவாத சக்திகள் ஐ.நா செயலாளர் தேவையற்ற விதத்தில் பேசியுள்ளார் என்றே கூச்சலிடுகின்றன. இத்தனைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் – அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்பட்டபோது ஐ.நா செயலாளர் அதனை வரவேற்றிருந்தார். அதேபோல் சமாதானப் பேச்சுவார்த்தையின்போது அதற்குப் பாராட்டும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவ்வேளையில் எல்லாம் மௌனமாக இருந்தவர்கள் தற்பொழுது படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்ததும், எவ்வாறு கண்டனம் தெரிவிக்க முடியும் எனச் சீறிஎழுந்துள்ளனர். அதாவது ஒருவரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதைக்கூடக் கண்டிக்கும் மனோநிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

ஐ.நா செயலாளருக்கு எதிரான இக்கூச்சலை முதலில் ஆரம்பித்துவைத்தவர்கள் தேசப்பற்றுள்ளோர் தேசிய இயக்கம் என்னும் அமைப்பே. ஜே.வி.பி யினர் உட்பட்ட தீவிர இனவாத சக்திகள் இவ்வமைப்பில் அங்கம் வகிக்கின்றன. இவ்வமைப்பினர் இது தொடர்பான கடிதமொன்றை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடமும் சமர்ப்பித்திருந்தனர்.

இத்தனைக்கும் இப்படுகொலைக்கும், அரசாங்கத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் தமிழ்த்தேசவிரோதக் குழுக்கள்தான் இப்படுகொலைகளைப் புரிந்தன எனச் சாதித்துவரும் இச்சக்திகளை ஐ.நா செயலாளரின் கண்டனம் ஏன் சீண்ட வேண்டும். அதாவது அரசாங்கம் கூறுவது போல் படுகொலைகளுக்கு தமிழ்த் தேசவிரோதக் குழுக்களே காரணம் எனின் அவர்களைக் கண்டித்தமைக்கு இவர்கள் ஏன் கூக்குரலிடவேண்டும். தாங்கள் ஏவலர்கள் என்பதனாலா? தமிழ் மக்களின் உரிமைப்போருக்கு எதிரானவர்கள் என்பதனாலா?

-வெளிநாட்டோரால் அனுப்பப்பட்ட-

# பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப்பொருட்களை அரசு இயலத்தில் விற்பனை செய்யும் சாத்தியம்

நூற்றுக்கு மேற்பட்டகொள்கலன்களில் ஆழிப்பேரலை அனர்த் தத்தில் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கென சர்வதேசம் எங்கிலும இருந்து அனுப்பிவைக்கப்பட்ட பத்துக் கோடி ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட நிவாரணப் பொருட்களைத் தனியாருக்கு இயலத்தில் விற்றுப்பணம் சம்பாதிக்க திரை மறைவில் சந்திரிகா அரசு முயல் வதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் அறிய வருவதாவது, வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட கொள்கலன்கள் ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருட்களுடன் கொழும்புத்துறைமுகத்தில் உள்ளன. சமீபத்தில் ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பொருட்களுக்கும் சந்திரிகா அரசு திடீரெனப் பெரும் வரிகளை விதித்தமையே அதற்கான காரணமாகும். எத்தகைய முன்னறிவித்தலும் இன்றி இவ்வாறு பெரும் வரிகளும், வேறு கட்டணங்களும் ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டதால், அவற்றைத் தருவித்த அரசசார்பற்ற நிறுவனங்கள் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகியுள்ளன. அவற்றிற்கான வரிப்பணத்தைச் செலுத்துவதில் அவை பலத்த சிரமங்களை எதிர்கொள்ளும் அதேவேளை, தொடரும் ஒவ்வொருநாளும், பராமரிப்புச் செலவென கட்டவேண்டிய பணத் தொகையும் அதிகரித்துச் செல்வதால், பலவும் அவற்றிற்கு உரிமை கோருவதிலிருந்து தம்மை விலக்கி வருகின்றன. உடுபுடவைகள், சக்கரநாற்காலிகள், ஊன்றுகோல்கள் படுக்கையணிகள், போர்வைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களே இவ்வாறு தீர்வைக்கு உட்படுத்தப்பட்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தருவித்தவர்கள் அவற்றிற்கான உரிமையைக் கோர மறுக்கும் பட்சத்தில் அரசு அப்பொருட்களைத் தனியாருக்கு இயலத்திற்கு விடுவதே வழமையான நடைமுறையாகும். இவ்வாறே இப்பொருட்களும் இயலத்தில் தனியாருக்கு விரைவில் விற்கப்படலாம் என்றும் தெரியவருகின்றது.

# இரத்மலானை மதுபான விடுதியில் விமானப்படையினர் தாக்குதல்

-விடுதிக்குப் பலத்த சேதம

கொழும்பு இரத்மலானையில் விடுதி ஒன்றில் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த சுமார் 15 பேர் விடுதியைத் தாக்கி பலத்த சேதம் ஏற்படுத்தியுள்ளனர். இவர்களது இத்தாக்குதலால் விடுதிக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா வரையான நட்டம் ஏறபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொடுத்த பணத்துக்குக் கூடுதலாக மதுவகைகளை பரிமாறுமாறு இவர்கள் கேட்டதாகவும் இதற்கு மறுப்புத்தெரிவித்ததால் கோபமடைந்த படையினர் விடுதியிலிருந்த பொருட்களை அடித்து நொருக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த கல்கிசைப் பொலிசார் சம்பத்தப்பட்ட நான்கு படையினரைக்கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்ததை அடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய படையினரைத்தேடிப் பொலிசார் வலை விரித்துள்ளனர். (32)

# பல்கலைக்கழக அனுமதிக்கு நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு?

- ஐ.தே.கட்சி ஆட்சேபம்

நடைமுறையில் உள்ள போட்டிப் பரீட்சையுடனான பல்கலைக்கழக அனுமதியை மாற்றி, அதற்கு மேலதிகமாக நேர்முகப் பரீட்சையை அறிமுகம் செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சேபித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினா ஜி.எல் பீரிஸ் இது தொடர்பாக நேற்றுத்தகவல் அளிக்கையில், இது அரசியல் தலையீட்டின் மூலம் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைக்க வழிவகுக்கும் எனத்தெரிவித்தார். எனவே இந்த முறையைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கைவிடவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (32)

-அநுராதபுரம், குருநாகலில்-

# இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற 1500 பேருக்கு விலக அனுமதி

அநுராதபுரம் மற்றும் குருநாகல் பகுதிகளில் மாத்திரம் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களில் 1500 போர் நிரந்தரமாகவே அதில் இருந்து விலகிச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக இடம்பெற்ற நிகழ்வுகளின் போதே இவர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. இதேவேளை இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்களில் இன்னமும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தம்மைப்படையிலிருந்து நிரந்தரமாக விலக்கிக்கொள்ளாமல் மறைந்து வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### பகிடிவதையில் ஈடுபட்ட மாணவன்,மாணவிக்கு விளக்கமறியல்

குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவன் ஒருவரைப் பகிடிவதைக்கு உட்படுத்திய மாணவன் ஒருவரும், மாணவி ஒருவரும் நேற்று நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் முதலாம் ஆண்டு மாணவனைப் பகிடிவதை என்ற போர்வையில் காபன் கடதாசியைச் சாப்பிடுமாறு வலியுறுத்தியதாகவும், பின்னர் அவரை தாக்கியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (32)

# கப்பலில் வந்த பாவனைக்காலம் முடிந்த உணவுப் பொருள் குறித்து ஆராய்வு

பாவனைக்காலம் முடிவடைந்த நிலையில் கப்பல் ஒன்றில் கொண்டுவரப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் தொடர்பில் சுற்றுச் சூழல்பாதுகாப்புத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. கடந்த மாதம் 2ஆம் திகதி இந்தக் கப்பல் கொழும்பு துறை முகத்தில் திருத்த வேலைகளுக்காக நங்கூரமிட்டதாகவும். இந்தக் கப்பலில் உள்ள உணவுப் பொருட்களின் பாவனைக்காலம் முடிவடைந்து விட்டதால் இவற்றை இலங்கையில் புதைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பொருட்களை இலங்கையில் புதைத்தால் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என சுற்றுச்சூழல் பாதுகாப்பு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இதேவேளை இந்தக்கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ள உணவுப்பொருட்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் சுங்கஅதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் மால் ஜெயமானி தெரிவித்துள்ளார். (32)

### 10 மில்லியன ஈரான் உதவி

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கையைக் கட்டியெழுப்ப ஈரான் நேற்று இலங்கையின் சனாதிபதி சந்திரிகாவிடம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. ஈரான் நாடடின் உதவி வெளியுறவு அமைச்சர் மொசின் அமிர்சாடே இதனை நேற்று சனாதிபதியிடம் கையளித்தார். (32)

# அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்

## -ஐ.தே.க.எச்சரிக்கை

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியதன் மூலம் எதிர்காலத்தில் விபரீதமான விளைவுகள் ஏற்படலாமென ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கைவிடுத்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் சனாதிபதிக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பொலிஸ் அதிகாரத்தை எந்த ஒருநபரிடமும் கையளிக்கும் வாய்ப்பு உள்ளமையானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.நாட்டில் சனநாயக ரீதியாக நடத்தப்படும் போராட்டங்களுக்குப் பாரிய அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பீரிஸ் தெரிவித்துள்ளார். (32)

### வெலிக்கந்தப்....

யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்பதால் இந்த பகுதியில் படைத்தரப்பு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. சிறப்புப் படையணியினரும், கொமாண்டோக்களும் இந்தப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை மட்டக்களப்பிலிருந்து பொலநறுவை செல்லும் நெடுஞ்சாலையில் வெலிக்கந்தப் பகுதியில் நிரந்தர சோதனைச் சாவடி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள ஓமந்தை சோதனைச் சாவடி போன்று அமைக்கப்படவுள்ள இந்தச் சோதனை நிலையத்தில் கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (32)

### கொபி....

இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பேர்ணாட் குணதிலக்க நேற்று ஐக்கிய நாடுகள சபை தலைமையகத்தில் கையளித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பானது இலங்கையில் தனிநாடு கோரிப் போராடி வரும் ஒரு அமைப்பு என்றும் உலகில் முக்கிய நாடுகள் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்துள்ளதோடு தமது நாடுகளில் விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் ஐ.நா செயலாளருக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான ஒரு பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் உலகின் மிக முக்கிய பதவி வகிக்கும் ஐ.நா செயலாளர் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறித்து தாம் அதிருப்தி அடைந்துள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. முன்னாள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர்கள் எவரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் படுகொலை தொடர்பில் கண்டனம் வெளியிடவில்லை என்றும் சிறிலங்கா அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

### விசேட கூட்டம்

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கொடிகாமம் வணிகர் மன்றத்தின் தலைவர், க.சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அன்றைய தினம் மதியம் ஒரு மணியுடன் தங்களுடைய வர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் பூட்டி மதிய போசனத்திலும், பொதுக் கூட்டத்திலும் அனைத்து வர்த்தகர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி வர்த்தக சங்க நிர்வாகசபை கேட்டுக்கொண்டுள்ளது. (28)

## உடும்பன் குளம் படுகொலை நினைவு நாள் நாளை அனுஷ்டிக்க ஏற்பாடு


சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் பிரதேச சபைக்குட்பட்ட உடும்பன்குளக் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்கள் நினைவு நாள் நாளை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

1986 ஆம் ஆண்டு இதே மாதம் உடும்பன்குளத்தைச் சேர்ந்த 125 பேர் சிறிலங்காவின் சிறப்பு அதிரடிப்படையினரால் வெட்டியும், சுட்டும் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 100 ஆண்களும், 25 பெண்களும் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தப் படுகொலையின் நினைவு நிகழ்வு நாளை அப்பகுதி மக்களால் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.

## ஏ-9 வீதி வாகன விபத்தில் மூவருக்குப் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான வீதியில் ஏற்பட்ட வாகன விபத்தொன்றில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். வாகனத்தின் பள்ளத்தில் இருந்து விலகிச் செல்வதற்கு எத்தனித்த வேளையிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது என அவதானிக்க முடிந்



முன்பகுதி முற்றாகச் சேதமாகியுள்ளது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் பிரதான வீதியின் 18 ஆம் போர் எனப்படும் இடத்தில் நடைபெற்ற மேற்படி விபத்தானது வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பூங்கன்றுகள் ஏற்றிய சிறிய ரக கன்டர் வாகனமும், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த சோடா வெற்றுப் போத்தல்கள் ஏற்றிய பாரவூர்தியும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட வேளையில் கன்டரில் பயணித்த மூவரும் படுகாயங்களுக்குள்ளாகினர். இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்திருந்தது. வீதியில் ஏற்பட்டிருந்த தது. இவ் விபத்தின்போது அக்குறாணை கண்டியைச் சேர்ந்த முஹமட் பரீஸ் (வயது44), முஹமட் முயாமில் (வயது47), அத்துகாதர் முஹமட் றசீம்(வயது41) ஆகிய மூவருமே படுகாயங்களுக்குள்ளாகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தின் மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

### புலிகளுக்கு....

எதிர்க்கட்சியான கன்சவேட்டிவ் கட்சியின் உறுப்பினர் ஒருவர் விடுதலைப்புலிகளை தடைசெய்யுமாறு விடுத்த வேண்டுகோளை கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு அவர்கள் நிராகரித்தமை தெரிந்ததே. அமெரிக்கா, நோர்வே உட்படப் பல நாடுகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் கனடாவில் மேற்கொண்டு, நிலைமையை சீர்கெட்டுப் போக அனுமதிக்க வேண்டாம் எனத் தம்மைக் கேட்டுள்ளதாகவும், விடுதலைப்புலிகளையும் உள்வாங்கி, இயங்குவதன் மூலமே போர் நிறுத்தத்தை மேலும் வலுப்படுத்தி, தொடர்ந்து பேணுவதற்கு உதவும் என நாம் திடமாக நம்புகின்றோம். இந்த நேரத்தில் அவர்களைத் தடை செய்வதன் மூலம் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை என்பதையும் நாம் உண்மையாக உணர்கின்றோம், எனக் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு தனது அமைச்சக உபகுழு குழுநிலை விவாதத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக் கும்போது தெரிவித்தமை தெரிந் ததே 2001 செப்ரெம்பரில் அமெரிக் காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலின் பின் கனடாவிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் அறி முகப்படுத்தப்பட்டது. அதன்கீழ் இதுவரை 35 அமைப்புக்கள் பயங்கரவாத அமைப்புக்களாகப் பல்வேறு கட்டங்களாக அறிவிக்கப்பட் டிருந்தாலும், விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட அமைப்பாக கனடாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதேவேளை 2002 இல் அமுலுக்கு வந்த கனேடிய பயங்கரவாதச் சட்டத்தை அதன் அமுல் காலமான 3 வருடங்களுக் குப் பின்னரும் அவ்வாறே தொடர்வது குறித்த மீளாய்வுகள் பல மட்டங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

### சிறுவர்களைப்....

றும்போதே அவர் தமது கவலையை வெளியிட்டுள்ளார்..

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இயக்கத்திற்கு ஆட்களைச் சேர்ப்பது என்கின்ற குற்றச்சாட்டை நாங்கள் முற்றாக மறுக்கின்றோம். ஆனால், இது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் உள்ள சிறுவர்கள் பற்றிய விபரங்கள் அங்கே இராணுவத்தினரால் திரட்டப்படுகின்றது. அந்தச் சூழ்நிலையில் பெற்றோர்கள் தங்கள் தற்பாதுகாப்புக் கருதி அவர்கள் கடத்தப்படுவதாக - பலாத்காரமாகப் பிடித்துச் சென்றதாக குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் சிறுவர்கள் என்று இனங்காணப்படுபவர்களை பெற்றோர்களிடம் இணைக்கின்றோம். சேர்ப்பிப்பவர்களை அவர்களிடம் சேர்ப்பிக்கின்றோம். ஏனையவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆகவே, இந்தச் சூழ்நிலையில், சிறுவர்களை விடுதலைப்புலிகள் கடத்திச் சென்றதாகவோ அல்லது விடுதலைப்புலிகள் பலாக்காரமாகப் பிடிப்பதாகவோ சொல்வது தவறு என்றே நினைக்கின்றேன்.

இதேவேளை, யுனிசெப் இறுதியாக வெளியிட்ட அறிக்கையில் கூட விடுதலைப்புலிகள் அமைப்பு சிறுவர்களைப் படையில் சேர்ப்பதாகக் குற்றம்சாட்டப்பட்டிருக்கின்றதே என செய்தியாளர்கள் கேட்டபோது,

யுனிசெப்பினால், அண்மையில் விடப்பட்டஅறிக்கை அவர்களால் பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் மிகவும் தவறானவையாகவே இருக்கின்றன. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலே அதிகமான சிறுவர்கள் கடத்தப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இதிலே உள்ள தவறுகளை நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம். இப்படியான புள்ளிவிபரங்களை வைத்துக் கொண்டு இப்படியான தவறான முடிவுகளை ஐ.நா அமைப்பு எடுத்துவிடக்கூடாது என்பதை நாங்கள் அவர்களுக்கு ஆதாரபூர்வமான தகவல்களைத் திரட்டி அனுப்பியிருக்கின்றோம். நாங்கள் ஒரு கடிதத்தையும் அனுப்பியுள்ளோம்.

இங்கே நாங்கள் ஆக்கபூர்வமான-நடைமுறைச்சாத்தியமான - எங்களுடைய சிறுவர்களுக்கான எதிர்கால நன்மை கருதி இந்த அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

நிச்சயமாக ஒரு மனிதாபிமான அமைப்பு மிகமிக அவசியமானது. அந்த வகையில் ஐ.நா.வின் செயலாளர் நாயகத்திற்கு இது பற்றிய பூரண விளக்கங்களைத் திரட்டி எங்களுடைய நிலைப்பாடுகளையும், உண்மை நிலைமைகளையும் அவர்கள் தந்த புள்ளி விபரங்களில் ஏற்பட்டுள்ள தவறுகளையும், சுட்டிக்காட்டி இவை தீர்க்கப்பட்டு ஒழுங்கான முறையில் அவர்களுக்கான மறுவாழ்வுத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஐ.நா வின் ஒத்துழைப்பைக் கேட்டுள்ளோம். இது சம்பந்தமான நடைமுறைச் சாத்தியமான

ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் அது சம்பந்தமான ஒரு விசேட பிரதிநிதியையும், இது தொடர்பாகப் பேச அனுப்பும்படியும் கேட்டுள்ளோம்

### யாழ்...

வேறு பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் பங்குபற்றி அரசின் அராஜகப் போக்கிற்கு எதிரான தமது கண்டனங்களை வெளியிட்டனர்.

யாழ். அரச செயலகம் முன்பாக ஆரம்பமான இப் பேரணி கண்டி வீதி ஊடாக கோவில் வீதியில் உள்ள இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் அலுவலகம் வரை சென்று, அங்கு நிறைவுபெற்றது. இப் பேரணியின் முடிவில் கண்காணிப்பு குழுவினரிடம் மகஜர்களும் கையளிக்கப்பட்டன. (33,41,27)

### நான்கு....

யத்தில் விடாப்பிடியாக இருந்து மக்களின் வெறுப்பை சம்பாதித்துக்கொண்ட தற்போதைய படை அதிகாரிகளின் பிரதானியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஏப்பிரல் முதலாம் திகதி ஓய்வுபெற வேண்டியுள்ளார். இராணுவத்தின் பனாகொட முகாமின் பிரிவுக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர ஏப்பிரல் 4 ஆம் திகதி ஓய்வு பெறவேண்டியுள்ள நிலையிலுள்ளார். 34 நாட்களுக்குள் நான்கு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் ஓய்வுபெறுவது இது தான் முதல் தடவை என்று பண்டத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பணிமனை

தமிழர் தாயகத்தின் தேசிய நாளிதழான ஈழநாதம் – அதன் புதிய பணிமனையினை யாழ்ப்பாணத்தில் பழைய இடத்தில் மீண்டும் திறந்துள்ளது என்பதனை எமது வாசகர்கள் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உங்கள் தொடர்புகளுக்கு: இல: 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, தொலைநகல்: 021-2227917

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது